DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1434 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 29, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



# இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறினார் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா

இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவி துறப்பதாக அறிவித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறினார் எனவும் எமக்குக் கிடைத்த பிந்திய செய்தியொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனது பதவி விலகக் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அவர் அனுப்பியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.என்றும் அவர் மிக உருக்கமாக இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# ‘உதயன் பல்சுவைக் கலை விழா’ விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள்

எதிரவரும் ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள ‘உதயன் பல்சுவைக் கலை விழா’விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் தற்போது விற்பனையாகின்றன.

1.கென்னடி-எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனம். தொலைபேசி :416 298 1598

2. மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்பில் அமைந்துள்ள **Majestic City** வர்த்தக வளாகத்தில் **Imma Trading Company** தொலைபேசி: 416 609 0827 மற்றும் **Designs 2 Print** தொலைபேசி: 647 858 2290

(உள்ளே விளம்பரத்தைப் பார்க்கவும்)



# கனடா மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணைமைந்தனின் நான்கு நூல்கள் ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன



மொன்றியால் வாழ் எழுத்தாளரும் நூலாசிரியருமான சண்முகராஜா வீணைமைந்தன் எழுதிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 23ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன மேற்படி நான்கு நூல்களின் வெளியீட்டு விழா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரைகள் மற்றும் நூல்கள் பற்றிய ஆய்வுரைகள் ஆகிய இடம்பெற்றன. முதலில் கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அக்னி சுரேஸ் ஆரம்ப உரையாற்றினார். கலை இலக்கியவாதிகள் பலர் நிறைந்திருந்த அந்த விழாவில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பில் வீணைமைந்தன் சண்முகராஜா கௌரவிக்கப்பெறுவதை படத்தில் காணலாம்.

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

BIG
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE


Latika Production
Latika Gold House
பெருமையுடன் வழங்கும்
பிரமாண்டமான உள்ளரங்க இசை நிகழ்ச்சி
CANADA
பொங்கிவரும் இசை வெள்ளம்
தென் இந்திய கனடிய
கலைஞர்களின் சங்கமம்
Actor/ Singer Chrish
Singer Unni Menan
Anchor B.H Abdhul Hameed
Singer Sainthavi
Actress/ Singer Rammiya Nambeesan
Music Mathan Band
Singer Aravinth
Singer Srithar Sena
MC KeeKee
Actor/ Singer / MC Vijay
Music Director /Singer A.R. Rehana
Singer Chandraleka Anubama
Singer Bob Shalini
Singer Manashi
Singer Anu Anand
Tickets $40 $60
CANADA Event Centre
Venue :
300 Water St, Whitby, ON L1N 9B6, Canada
October 21 SATURDAY 4PM
Tickets VIP $100 VVIP$200
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.
416 423 7555 - 416 625 5010

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# நீதிபதி ரி.சரவணராஜா அவர்களின் பதவி துறப்பால் இலங்கையின் அரசாங்கமும் பாராளுமன்றமும் நீதிக்கு விரோதமானவை என்பது மீண்டும் நிரூபணமாகியது

பௌத்தமும் சிங்களமும் சேர்ந்து இலங்கைக்கு மீண்டும் ஒரு தடவை அவப்பெயரை தேடித்தந்த சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் தொடக்கம் உலக அரசியல் மட்டத்தில் பேசுபொருளாக தோற்றம் பெற்றுள்ளதை எமது தமிழினம் நெஞ்சம் குமுறுகின்றதையும் தாங்கிக் கொண்டு ஒருவரை ஒருவர் கடந்து போவது போலவே மணித்தியாலங்கள் நகர்கின்றன.

இலங்கையில் தான் வகித்த நீதிபதி பதவியை உள்ளார்ந்தமாக நேசித்ததாகவும் அதன் காரணமாகவே நீதியை நிலை நாட்ட முனைந்தேன் என்று தனது சக சட்டவாதிகளோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு தனது பிடியில் இருந்து விலகாமல் இருந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அவர்களை தொடர்ச்சியாக சிங்களமும் பௌத்தமும் ஆட்சியின் பலத்தை கைகளில் எடுத்துக் கொண்டு எமது நீதியின் காவலனை கடந்த சில வாரங்களாக துரத்திய வண்ணம் இருந்திருக்க வேண்டும். அதிகாரங்கள்
மிக்க பதவியில் அமர்ந்திருந்த அவரது நீதிக்கு சார்பான உத்தரவை அரசாங்கத்தின் ஏவல் நாயாகத் தெரியும் சட்டமா அதிபர் அலுவலகம் ரத்து செய்து விட்டு தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தீர்ப்பை வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்த இவ்வாறான கொடிய ஆணையைப் பிறப்பிக்க பௌத்தம் சிங்களம் ஆகிய இரண்டு பிசாசுகள் நெருக்குவாரத்தை வழங்கியிருக்கின்றன.

'உங்களைப் போன்றவர்கள் தான் இந்த தேசத்திற்குத் தேவை" என்று ஜனாதிபதியும் நீதி அமைச்சரும் பாராட்டியிருக்க வேண்டிய இந்த நீதிகாத்த பெருமகனின் நேர்மையும் தோற்றுவிட்டதாக நாம் ஏங்குவதும் எமக்கு ஓரளவு புரிகின்றது அல்லவா?

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவி துறப்பதாக அறிவித்துள்ள பதவியை இராஜினாமாச் செய்த நீதிபதி ரி.சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறினார் என்பது தமக்கு அவமானத்தை தேடி தரக்கூடியன என்று கூட சிந்திக்காமல் இருக்கும் தேசத்தின் ஜனாதிபதியும் அமைச்சரவையும் எவ்வாறு எதிர்வரும் நாட்களில் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வைத் தருவார்கள் என்ற கேள்வி உலகெங்கும் காற்றோடு கலந்து உலக நாடுகளின் காதுகளை நோக்கி பயணித்துக் கொண்டிருகின்றது.

நீதியின் பக்கம் நின்று தீர்ப்பு வழங்கியதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் அதற்கு மாறாக கொடிய புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக அவரைக் கண்காணித்துவந்துள்ளார்கள் என்பதை அறியும் போது எமது கண்களும் ஈரமாகின்றன. கடந்த சில வாரங்களாக நிம்மதி இழந்து தன் குடும்பத்தினரோடு எவ்வாறு அவர் தனது நாட்களை கழித்திருப்பார் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"கடந்த சில நாட்களாக நான் சந்தித்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்" என்று அவர் எழுதி வைத்துள்ள வரிகள் இங்கையின் நீதிதுறையில் ஒரு 'கறை படிந்த' காலப்பகுதியின் சாட்சிகளாக விளங்கவுள்ளன என்பது நிச்சயமான உண்மையே!

இவரது நீதிக்கு சார்பான போராட்டம் இதற்கு முன்னரும் பல தளங்களில் ஆரம்பித்திருந்ததை நீதிபதி அவர்களின் சகாக்கள் தெரிவிக்கும் கருத்துக்களில் இருந்து நன்கு புலப்படுகின்றது. ஒரு அற்புதமான தமிழ் மகன் ஒருவரின் நீதி சார்ந்த கடமைகளில் தடங்கல்கள் தோன்றும் படலம் சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமானதை நாம் அறிவோம். முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட குழுவினர்கள ஆய்வினை மேற்கொண்டிருந்த போது, குருந்தூர் மலையில் பௌத்த மதகுருமார்கள் வழிபாடுகளை மேற்கொண்ட சம்பவம் இதன் ஆரம்பப் புள்ளியாக விளங்கியது

இந்த சம்பவத்தை நேரில் பார்வையிட்ட நீதிபதி உடனடியாக வழிபாடுகளை நிறுத்தக்கோரி பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.எனினும் அங்கு கூடியிருந்த பௌத்த பிக்குகள் நீதிபதி சரவணராஜா அவர்களோடு முரண்பட்டு வாக்குவாதம் செய்துள்ளார்கள்.
வடக்கு கிழக்கில் நீதிமன்றங்கள் எதைச் சொன்னாலும் கணக்கில் எடுக்கப்போவதில்லை, தாங்கள் நினைப்பதைத்தான் செய்வோம் என்கின்ற செய்தியினைத்தான் அவர்களின் நடவடிக்கை ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்கள் எனக் கண்டனம் வெளியிட்டனர்.

இந்த நீதிப் புறக்கணிப்பின் தொடர்ச்சியாக இலங்கைப் பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும், நீதிபதியை அச்சுறுத்தும் விதமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கருத்துக்களை வெளியிடும் அளவிற்கு இலங்கையின் நீதித்துறையிலே ஓட்டைகள்' நிறைந்து காணப்படுகின்றன என்பது தெரிய வந்தது. பாராளுமன்றத்தில் இனவாதக் கோசமிட்ட அந்த பௌத்த வெறி கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரை கட்டுப்படுத்த ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு விரைந்து வந்திருக்க வேண்டும்.

ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. நீதித்துறையின் உயர் விருது வழங்கப்பட வேண்டிய ஒரு நீதிபதியை இலங்கை அரசும் அதன் பாராளுமன்றமும் நாட்டை விட்டு துரத்தியுள்ளன. இவ்வாறான அந்த ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் காப்பாற்றுவோம் எனவே அடுத்த தேர்தலில் எம்மை ஆதரியுங்கள் என்று தமிழர்கள் வாக்குகளுக்காக எம்மிடம் இனி-வரும் நாட்களில் வரவுள்ள எமது பிரதிநிதிகளுக்கு நாம் கதவடைப்பு செய்வோம்!

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


ௐ

OM NAMO NARAYANA
125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்
N. P. ராஜசேகர்
Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA
Mobile & WhatsApp: 001 416 904 6278
அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகர்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

Notice

NOTICE IS HEREBY GIVEN that on behalf of Dexter Seusahai application will be made to the Legislative Assembly of the Province of Ontario for an Act to revive Tribal Carnival Inc. The application may be considered by the Standing Committee on Procedure and House Affairs. Any person who has an interest in the application and who wishes to make submissions, for or against the application, to the Standing Committee on Procedure and House Affairs should notify, in writing, the Clerk of the Legislative Assembly, Legislative Building, Queen's Park, Toronto, Ontario, M7A 1A2. Dated at 4pm, this 30th day of September 2023.

Dexter Seusahai

SAREE BLOUSE தைத்தல் மற்றும் பயிற்சி வகுப்புக்கள்

இலங்கையில் தையல் துறையில் பல வருடங்கள் அனுபவம் பெற்றவரான பெண்மணியினால் நியாயமான கூலியில் சாறி பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் சாறி பிளவுஸ் கட்டிங் வகுப்புகளும் எடுக்கப்படும்.
மிசிசாகா நகரில் Mavis & Dundas சந்திப்புக்கு அருகில் நிறுவனம் உள்ளது. அத்துடன் Scarborough நகரிலும் விரைவில் வகுப்புக்கள் ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு:- தர்மா : 437 8333 2660 அல்லது 905 268 0272

மணமகள் தேவை

மன்னாரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 32 வயதுடைய கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பெற்றோர் கனடாவில் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் க.பொ.த (உயர்தரம்) கற்றவர். மேலும் விபரங்களை அறிய 365-777-6868 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி

Canadian Citizenship Exam க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

Ramneet 437-771-5294

HELP WANTED


தமிழ்ப்பூங்காவில் கீழ்வரும் இரண்டு வேலைகட்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Personal Secretary
2. Cleaner

தொடர்புகட்கு:
thamilpoonka@gmail.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# வடக்கு ஆளுநரின் அரசியல் தலையீடு கல்வித் துறையை பாவிக்கிறது – ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் குற்றச்சாட்டு





வடமாக ஆளுநரின் நீதியற்ற அரசியல் தலையீடு காரணமாக வடமாகாண கல்வித்துறையை பாதிக்கப்படுவதாக ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் குற்றச்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கடந்த 21ஆம் திகதி இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் வடமாகணக் கல்வித்துறை தேவையற்ற அரசியல் தலையீடு காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு ஆளுநர் இடமாற்றச் சபையின் தீர்மானத்தை மீறி வலிகாம வலையத்தில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் மூவரின் இடமாற்றத்தை நிறுத்தியுள்ளார்.

ஆளுநரின் அரசியல் தலையீடு வெளிப்படையாக தெரியவந்துள்ள நிலையில் இது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

வடக்கில் நீதியை நிலை நாட்டுவேன் என கூறிக்கொண்டு வந்த ஆளுநர் நீதியை குழி தோண்டி புதைக்கும் விதமாக செயற்படுவது ஏற்க முடியாது.

இலங்கையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வெளிநாடு சென்றுள்ள நிலையில் ஆளுநரின் தேவையற்ற அரசியல் தலையீடு ஏனைய ஆசிரியர்களை தமது செயற்பாட்டில் இருந்து பின்னோக்கி நகர்த்துவதாக அமையும்.

ஆகவே இடமாற்றச் சபையயின் தீர்மானங்களை மீறி வடக்கு ஆளுநர் இடமாற்றச் சபைத் தீர்மானங்களில் தலையீடு செய்வதை நிறுத்தாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைக்கு தள்ளப்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண மாவட்டசமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளின் மாவட்ட ரீதியான போட்டிகள் ஆரம்பம்!





23-09-2023 அன்று யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி பயனாளர்களின் பிள்ளைகளின் மாவட்ட கலை இலக்கியப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதில் அதிபர் திரு. அ.ஆனந்தராசா, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்டமட்ட சமூர்த்தி பணிப்பாளர் திரு. இ. சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் எழுச்சி ஊர்திப் பவனி





தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் எழுச்சி ஊர்திப் பவனி யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் 24-09-2023 அன்று ஆரம்பமானது.

வடக்குப் முழுவதும் செல்லவுள்ள எழுச்சி ஊர்திப் பவனி கொடிகாமத்திலிருந்து ஆரம்பித்து சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில், மன்னார், வவுனியா ஊடாக பயணித்து கிளிநொச்சியை வந்தடைந்து 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளது.

# வடமராட்சி வடக்கில் தொழிற்பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்!





யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொழிற் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 22-09-2023 அன்று தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர் தம்பன் துசாந்தன் தலைமையில இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, Naita மாவட்ட முகாமையாளர், undp திட்ட உத்தியோகத்தர்கள், பிரித்தானிய உயரஸ்தானிகரக அதிகாரிகள், cecd நிறுவன உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு தாயார் கோரிக்கை!



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு மீள அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சாந்தனின் தாயார் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகிறார்.


பிரதமர் கொலை வழக்கில் கைதாகி 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் கடந்த ஆண்டு இந்திய மத்திய அரசினால் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையில் பின்னர் இலங்கைக்கு மீள செல்வதற்கான உரிய ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் என கூறி கடந்த 10 மாத கால பகுதிக்கு மேலாக திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்ட எனது மகனை மீள இலங்கைக்கு அழைத்து வந்து தன்னிடம் ஒப்படைக்குமாறு சாந்தனின் தாயார் கடந்த 10 மாத கால பகுதியாக பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்த கடிதத்திற்கு இது வரையில் வெளிவிவகார அமைச்சிடம் இருந்து பதில் வரவில்லை எனவும், 10 மாத காலப்பகுதிக்குள் 5 கடிதங்களை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியும் பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.



HRCSL – Head Office,
No 14, R. A. De Mel Mawatha,
Colombo 04,
Sri Lanka.

MRS. Thillaiampalam Maheswary,
Thevankurichchi,
Ilakkanawaththai,
Udupiddy,
Jaffna.
20.09.2023

EARNEST APPEAL TO HELP RETURN MY SON TO HOMELAND - SRI LANKA.

Honourable Sir,

MR. Thillaiampalam Suthenthirarasa
Passport No K0081220
NIC. 691190587 V

I am the above named, aged 77 is now on bed and partially disabled condition Due to old age and loss of eyesight. Pray your honour to help my son Thillaiampalam suthenthirarasa aged 54 who is kept in Trichchy special camp, after being released From the accusation of the murder case of former Honourable Prime minister Rajive Ghandi.

My son T. Suthenthirarasa has not seen me for the Last 32 years anticipates to see me atleast before my death. He is now in the opinion of pursuing spiritual path and joining social activities in his birth place.

It is my earnest pray at my disability to help my son return at my Latter Part of life.

I am Sir,

T.Mahesway
NIC - 476083856V
My Contact Number- 0094 77 3481 379
Mail ID - mathisuthakaran@gmail.com

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச தர கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணம் எனக்கு உண்டு – இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன்



"யாழ்ப்பாணத்தில் சர்வதேச தர கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணம் எனக்கு உண்டு" என பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சந்தோஷ் நாராயணன், மாலை தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளேன். துவண்டு போய் உள்ள மக்களுக்கு உற்சாகம் தரும் வகையில் இந்த இசை நிகழ்வு இருக்கும் என நம்புகிறேன்.

இந்த இசை நிகழ்வு முற்றிலும் இலவசமானது. அனைத்து தரப்பு மக்களும் ஒன்றினையும் நிகழ்வாக இருக்கும். அடுத்து வரும் நாட்களின் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்புக்கள் தொடர்ந்து வரும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள இசைத்துறை சார்ந்தவர்களையும், எனது குழுவையும் ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் நடாத்தும் இந்த இசை நிகழ்வும இலங்கை தாண்டி வெளிநாடுகளில் உள்ளவர்களின் கவனத்தையும் ஈர்க்கும் என்ற நம்பிக்கை உண்டு என தெரிவித்துள்ளார்.

# "இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்" 12 அமெரிக்க எம்.பிகள் வலியுறுத்தல்



சித்திரவதைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அண்டனி பிளின்கின் உறுதிசெய்ய வேண்டுமென, அந்நாட்டின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையில் அரச படைகள் மற்றும் இதர அரச அமைப்புகளால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடூரமான சித்திரவதைகள் குறித்து தமது கடித்தத்தில் அவர்கள் விவரித்துள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்ற மக்களவையில் பென்சில்வேனியா மாநிலத்திலிருந்து தெரிவான ஜனநாயக கட்சியின் உறுப்பினர் சம்மர் லீ அம்மையாரால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையில் "இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சரவதேச மனித உரிமைகள் சட்டங்களை மீறி நடந்து கொண்டது அகியவற்றிற்கு இலங்கையை முறையாக குற்றஞ்சாட்ட வேண்டும்" என கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட அட்டூழியங்களை அவர்களது கடிதம் விரிவாக விவரிக்கிறது.

ஐ நாவின் சித்திரவதைக்கு எதிரான தீர்மானத்தின் கீழ் இலங்கை மீது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த கடிதத்தில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

"எமது அபிப்பிராயத்தில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் ஆகியவற்றை காரணம் காட்டி தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருப்பதானது அமெரிக்கா கடைபிடித்து வரும் மனித உரிமைகள் மற்றும் அதன் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கு எதிரானதாகும், அவை நிலை நிறுத்தபட்ட வேண்டும்" என்று அவர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளனர்.

இலங்கை அரசுசும் அதன் இராணுவமும் பாரிய சர்வதேச குற்றங்களை இழைத்துள்ளதாக, அந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"இலங்கை அரசும் அதன் இராணுவமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நம்பத்தகுந்த வகையில் பாரியளவில் சர்வதேச குற்றங்களைச் செய்துள்ளனர். அதிலும் குறிப்பாக, கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மே மாதம் வரை, இலங்கை இராணுவம் திட்டமிட்டு - வேண்டுமென்றே தமிழ் பொதுமக்கள் மற்றும் சிவிலியன் நிலைகள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியது. அதிலும் மருத்துவமனைகள் மற்றும் அரசால் போர் நிறுத்த வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் இத்தாக்குதல் இடம்பெற்றது".

"இலங்கையின் அரச படைகள் நூற்றுக்கணக்கான தமிழ் பெண்கள் மற்றும் யுவதிகளை - அவர்களை கொலை செய்வதற்கு முன்னரோ அல்லது அதற்கு பிறகோ - பாலியல் பலாத்காரம் மற்றும் வன்புணர்ச்சி செய்தனர்". என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது கடிதத்தில் இலங்கை இராணுவம் செய்த பாலியல் துஷ்பிரயோகங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் பொறுப்புக்கூறல் இல்லாமை குறித்தும் தமது கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். "பாரிய மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்கு பதிலாக, அவர்களுக்கு பதவி உயர்வு போன்ற மதிப்பளிப்புகளைச் செய்யும் கலாச்சாரம் இலங்கையில் நிலவுகிறது".

"இந்த குற்றச்சாட்டுக்களை சுயாதீனமாக விசாரணை செய்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பதிலாக, போர்க்குற்றம் சாட்டப்பட்ட பலருக்கு இலங்கை அரசாங்கம், அரசு அல்லது இராணுவத்தில் உயர் பதவிகள் அளித்து கௌரவித்தது. அதில் சிலர் இன்றும் பதவியில் உள்ளனர்", என தமது ஆழ்ந்த கவலையை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

நீதிபரிபாலனம், சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்த, தொடர்ச்சியாக வந்த அரசுகள் தவறிவிட்டன என்றும், அதனால் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சு சித்திரவதைகளுக்கு எதிரான ஐ நா தீர்மானம் பிரிவு 30இன் கீழ் அந்த விதிகளை மீறியதற்காகவும், அந்த விதியின் கீழான தனது கடப்பாடுகளை நிறைவேற்றாமல் இருப்பதற்காகவும் இலங்கை அரசு மீது முறைப்படியன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி அங்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும், தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருக்கும் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவரவும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவும் அவர்கள் மூன்று கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

இதை எட்டுவதற்கு முதலாவதாக பேச்சுவார்த்தைகளை நடாத்தலாம் எனவும், அந்த பேச்சுவார்த்தகள் தோல்வியடைந்தாலோ அல்லது பலனளிக்கவில்லை என்றாலோ அல்லது முட்டுக்கட்டை ஏற்பட்டாலோ அடுத்த கட்டமாக மத்தியஸ்தம் மூலமாகச் செய்யலாம் எனவும் கூறியுள்ளனர்.

அந்த வகையில் பிரச்சினை ஆறு மாதங்களுக்குள் தீர்க்கப்படவில்லை என்றால், இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கபப்ட வேண்டும் என அந்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

கட்சி சார்புகளுக்கு அப்பாற்பட்டு ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகளை சார்ந்த அந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அண்டனி பிளின்கனுக்கு எழுதிய கடிதத்தை "பேர்ள்" உட்பட பல்வேறு மனித உரிமை அமைப்புகள் வரவேற்றுள்ளன.

https://d12t4t5x3vyizu.cloudfront.net/summerlee.house.gov/uploads/2023/09/Sri-Lanka-Letter-Final51-2.pdf




இலங்கை செய்திகள் Sri Lanka News

# சீனா வட்டிக்கு பணம் வழங்கும் நாடுகளில் முன்னிலை வகிக்கிறது – அவைத் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு!




வட மாகாண சபை அவைத தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணம் ஊடாக அமையத்தில் இன்று இடம்பெற்றது. இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

உலகில் சீனா குறைந்த பணத்தை கூடுதல் வட்டிக்கு வழங்கும் நாடாக திகழ்கின்ற நிலையில் தனது அடி மடியில் கை வைக்காத நிலையில் சீனா நடந்து கொள்கிறது.

நாங்கள் அறிந்த வரையில் முன்னர் ஆப்கான்காரர்களே குறைந்த பணத்தை கூடுதல் வட்டிக்கு கொடுப்பவர்களாக அறிந்திருக்கிறோம்.

ஆனால் இந்நிலை மாறி சீனா தற்போது உலகில் குறைந்த பணத்தை கூடிய வட்டிக்கு கொடுக்கும் நாடாக மாறி வருகிறது.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனாவே அதிக கடன்களை வழங்கியுள்ள நிலையில் தான் வழங்கிய கடனை எந்த வழியிலும் சீனா மீளப்பெறுவது நிச்சயம்.

சர்வதேச நாணய நிதியம் சீனா இலங்கைக்கு வழங்கிய கடன் தொடர்பில் சரியான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு கூறி வரும் நிலையில் இதுவரை அவ்வாறு நடந்ததாக தெரியவில்லை.

நாங்கள் ஒன்றை கூறுகிறோம், இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில் இதனை காரணமாக வைத்து கடன் வழங்குவது தொடர்பில் ஐ.எம்.எஸ் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஆகவே சீனாவிடம் இலங்கை பெற்ற கடனை எந்த வழியிலும் சீனா மீளப் பெறுமே தவிர கொடுத்த கடனுக்காக தனது அடிமடியில் கை வைக்க விடாது என்றார்.

# தடைகளை மீறி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு 23.09.2023 சனிக்கிழமை கல்லூரி முன்றலில் நடைபெற்றது.



இவ்இதத்ததான நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் பலர் பங்கேற்று இரத்ததானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடம் தோறும் செப்டம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் இரத்ததான நிகழ்வு நடாத்தப்பட்டுவருகிறது.

அந்த வகையில் இன்றைய இரத்ததான நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் கல்வி அமைச்சினால் கல்லூரி வளாகத்துக்குள் இரத்ததான நிகழ்வு உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்கு திடீர் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இரத்த தான நிகழ்வு நடைபெற்றது

# தும்புத் தொழிற்சாலை எனும் பெயரில் இயங்கிவந்த சட்ட விரோத மணல் விற்பனை, கல் உற்பத்தி விற்பனை நிலையம் பருத்தித்திறை பொலிசாரால் முற்றுகை!



தும்புத் தொழிற்சாலை எனும் பெயரில் இயங்கிவந்த சட்டவிரோத மணல் விற்பனை, கல்லரிவு உற்பத்தி விற்பனை நிலையம் பருத்தித்துறை பொலிசாரால் 22-09-2023 அன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

தென்னந் தும்பு உற்பத்தி தொழிற்சாலை என்ற பெயரில் அனுமதி பெறப்பட்டு அங்கு பாரியளவில் மணல் அகழப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டு வந்ததுடன் மண் கல் அரிவு செய்யப்பட்டு அதுவும் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பிற்பகல் 7:30 மணியளவில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலீஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான 15க்கு மேற்பட்ட பொலிஸார் குறித்த நிலையத்தை சுற்றிவளைத்து நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நான்கு மோட்டார் சைக்கிள்கள், ஒரு ஜேசீபி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபரும், நான்கு மோட்டார் சைக்கிள்களும், ஜேசீபி வாகனமும் பருத்தித்துறை நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக முன்வைக்கப்படவுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் இரு நூறு மீற்றருக்கு அதிக நீழமாகவும் சுமார் 15 அடி ஆழமும் 20 அடிக்கு மேல் அகலமும் கொண்ட பாரிய குழி ஜேசிபி இயந்திரத்தால் குழி தோண்டப்பட்டே சட்டவிரோத உமணல் விநியோகம், மண் கல்லரிவு என்பன இடம் பெற்று வந்துள்ளமை குறிப்பிடதக்கது.

# ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் வடமாகாணத்தில் வீடற்ற 25,000 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கான அவசர நடவடிக்கைகள் முன்னெடுப்பு



வடமாகாணத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 25,000 நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுத்து வடமாகாணத்தில் உள்ள வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வீட்டுத்திட்டம் தொடர்பில் 22.09.2023 அன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

குறிப்பாக நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும், மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டது.

நிரந்தர வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 5 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. வீடொன்றுக்கு தேவையான வசதிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என கூறப்படுகின்றது.

இவ்வீடுகளின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் வடமாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட சில வீட்டுத்திட்டங்கள் இறுதிக் கட்டம் வரை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்படி கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களில் சுமார் 6000 நிரந்தர வீடுகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இவ்வாறான தோல்வியடைந்த வீட்டுத்திட்டங்களைப் போலல்லாது இந்த 25,000 வீடமைப்புத் திட்டத்தை தயாரிப்பதில் பணிகள் முடியும் வரை அதிகாரிகள் மிகவும் திட்டமிட்டு சரியான முறையில் செயற்பட வேண்டுமென ஆளுநர் அறிவுறுத்தினார்.

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் இத்திட்டத்திற்காக செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில வீட்டுத்திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் கௌரவ ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் இவ்வீடமைப்புத்திட்டமானது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்படும் என்று கூறினார்.





# மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரிக்கு கிடைத்த தங்கம்: தமிழ்மொழித்தின போட்டிகளில் வெற்றி



மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் இந்த வருடம் (2023) மாகாண மட்டத்திலான தமிழ் தினப் போட்டிகளில் வெற்றிகளை பெற்றுள்ளன. பாவோதல், தனி இசை, போட்டிகளிலும் வெற்றிகள் தட்டிச் செல்லப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித் தினப் போட்டிகள் யாழ். மகளிர் இந்துக் கல்லூரியில் 16.09.2023 அன்று நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் மாணவியான ஜெயக்குமார் கஸ்னிக்கா பிரிவு - 2 பாவோதலில் முதலிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். பிரிவு - 2 பாவோதலில் இரண்டாம் இடத்தினை யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி மாணவி செல்வி பாரதிதாசன் ஜனார்த்தனி பெற்றார்.

அத்துடன் மூன்றாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி சிறி தீபன் அஹாஷினி பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "தியாக தீபம்" திலீபன் நினைவேந்தல் கொட்டும் மழையிலும் உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது

- நடராசா லோகதயாளன்



தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளின் பிரதான நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தில் ஆரம்பமாகியது.

அந்தவகையில், தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணிக்கு அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூரின் வீதியிலும், நினைவாலயத்திலிலும் சமநேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் பொதுமக்களால் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும் தற்போது இடம்பெற்று வருகின்றது.



குறிப்பாக தியாதீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பமான நேரம் யாழில் கடும் மழை பொழிய ஆரம்பித்ததுடன் கடும் மழையினையும் பொருட்படுத்தாது பல்வேறு பகுதிகளிலுமிருந்தும் மக்கள் அணிதிரண்டு திலீபனுக்கு மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதேவேளை திலீபனின் நினைவேந்தலை தழுவி இளைஞர்கள் இருவர் தூக்குக்காவடி எடுத்து திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தியாக தீபம் திலீபனின் 36வது ஆண்டு நினைவேந்தலானது இன்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உணர்வூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிலையில் பல்கலைக் கழகத்தில் பிரத்தியேக இடத்தில் திலீபனின் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்தூவி பல்கலை மாணவர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டதுடன். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தியாக தீபத்தின் நினைவாக மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

தியாக தீபம் திலீபனின் நினைவஞ்சலியானது 26-09-2023 அன்று திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம் பெறவிருந்த நிலையில் நீதிமன்றம் ஊடாக திருகோணமலை துறைமுக பொலிசாரால் குறித்த நிகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டது.

குறித்த தடையினை நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ஆறு நபர்களின் பெயர்களின் விபரங்கள் அடங்கிய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன், திருகோணமலை துறை முகப் பொலிஸார் தடை விதித்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் கதிரைக்கு மலர் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தமிழர் தாயக பகுதிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், புதுக்குடியிருப்பு நகரில் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினால் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.



தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காய் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரின் வீதியில் 12 நாட்கள் நீராகாரம் ஏதுமின்றி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்றாகும்.

இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தக சங்க தலைவர் நவநீதன் தலைமையில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது.

இந்நிலையில், புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.






# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பேராதனை பல்கலைக்கழக பல் மருத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மன்னாரைச் சேர்ந்த மாணவனின் மரணம் தொடர்பில் தீர்ப்பு



(25-09-2023)

பேராதனை பல்கலைக்கழக பல் மருத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் துரதிஷ்டவசமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் திறந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் முருங்கன் பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய எஸ். திவின் சாகித்தியன் என்ற பல்கலைக்கழக மாணவரே கடந்த 22 ஆம் திகதி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் திடீரென உயிரிழந்திருந்தார்.

சடலத்தின் மீதான பிரேத பரிசோதனையின் பின்னர், பேராதனை வைத்தியசாலையின் நிபுணத்துவ சட்ட வைத்தியர் பிரபாத் சேனசிங்க தலைமையில் உரிய திறந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிரிழந்த இளைஞனின் உடல் உறுப்புகளை பேராதனை பல்கலைக்கழகத்தின் சட்ட வைத்திய பீடத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் - முருங்கன் பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவன் பேராதனை பிரதேசத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் மேலும் இரு மாணவர்களுடன் தங்கியிருந்துள்ளார்.




இதன் போது கடந்த 22 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் விடுதியில் இருந்த போது மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் குறித்த மாணவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தியாக தீபம் திலீபன் அவர்களது நினைவு ஊர்திக்கு வடமராட்சியில் மக்கள் அஞ்சலி!



ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி திலீபன் அவர்களது ஊர்திக்கு வடமராட்சி - நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

23-09-2023 அன்று பிற்பகல் வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியல் இருந்து ஆரம்பித்த தியாக தீபம் திலீபன் அவர்களது ஊர்தி வலம் பிற்பகல் 6:30 மணியளவில் நெல்லியடியை வந்தடைந்தது, தொடர்ந்து பருத்தித்துறை ஊடாக இன்பருட்டிக்குச் சென்றது.

நெல்லியடி, பருத்தித்திறை பகுதியில் மக்கள் மலரஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து இன்பருட்டியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் திரண்டு அஞுசலி செலுத்தினர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# மன்னாரில் தீ விபத்து — பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசம்



**- மன்னார் நிருபர் (23.09.2023)**

மன்னார் கீரி பகுதியில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான காணிக்கு அருகில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமடைந்துள்ளது.

சனிக்கிழமை (23) மதியம் 2.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ பரவல் காரணமாக அப்பகுதியில் உள்ள மரங்கள் புதர்கள் உட்பட அனைத்திலும் தீ பரவிய நிலையில் அதிக காற்று காரணமாக தீயை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தொடர்ந்து வீசிய காற்று காரணமாக அருகருகில் இருந்த காடுகளுக்கு தீ பரவல் அடைந்தது.

இதனை தொடர்ந்து அருகில் இருந்த பொதுமக்கள் மற்றும் கடற்படையின் தொடர் முயற்சியினால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் தீ பரவல் காரணமாக அப்பகுதியில் காணப்பட்ட ஆயிரக்கணக்கான பனை மரங்கள் உட்பட பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உரிய தீயணைப்பு பிரிவு காணப்பட்டமையால் வவுனியா தீயணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் அனைத்து எரிந்து அணையும் வரை தீயணைப்பு சேவை சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# போரில் உயிரிழந்தவர்களுக்கான பொது நினைவுச்சின்னம் பேரினவாதம் உயிரோடிருக்கும்வரை தமிழினம் அனுமதியாது

## - பசுமை இயக்கத்தலைவர் ஐங்கரநேசன் உறுதி



ஜனாதிபதிச் செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. இது தொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ் - மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது. தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இக்கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. ஆனால், அரசதரப்பு எத்தகைய தீவிரங்காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கம் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும்வரை தமிழினம் அனுமதியாது. என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிச் செயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொதுநினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது. போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவிற் கொள்ளும் இம்முடிவிற்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள். இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, அதனை எவ்வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங்கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவுசெய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

போர்முடிவுற்று பதின்னான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வ சமிக்ஞையினையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லை. போர்மரபுகளையும் மீறி மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைத்தழித்த அரசதரப்பு, யுத்தவெற்றியைப் பறைசாற்றும் விதமாகப் படைத்தரப்பினருக்கான நினைவுச் சின்னங்களைத் தமிழர்தாயகப் பகுதியெங்கும் அமைத்துள்ளது. ஆனால், அகிம்சை வழியில் போராடி உயிர்துறந்த திலீபனின் நினைவுகூருதலை சிங்களக் குண்டர்களின் மூலமும், தனது ஏவல்துறையான காவல் துறையின் மூலமும் குழப்பி வருகின்றது. திலீபனின் நினைவேந்தல் நாட்களிலேயே இனநல்லிணக்கத்தின் பெயரால் பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடலையும் நிகழ்த்துகிறது. உலகை ஏமாற்றும் அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் அஞ்சல் பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுப்பு



**- மன்னார் நிருபர்** (25-09-2023)

கொழும்பில் ஒருங்கிணைந்த தபால் சங்கம் ஏற்பாடு செய்த தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் அஞ்சலகம் சார்பாக திங்கட்கிழமை (25) மதியம் 12 மணி முதல் 1 மணி வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் மன்னார் அஞ்சலகத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்தனர்.

சம்பள முரண்பாடு தீர்த்தல், வாழ்க்கைச் செலவாக 20 ஆயிரம் ரூபாவை உயர்த்தல், பதவி உயர்வை வழங்கல், வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டம் மன்னார் அஞ்சலகத்திற்கு முன் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு, காரைநகர் என பெயர்மாற்றம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவையொட்டி நூற்றாண்டு விழா!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் காரைதீவு, காரைநகர் என பெயர் மாற்றப்பட்டு நூறாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, காரைநகர் அபிவிருத்தி சபையினரின் ஏற்பாட்டில் நூற்றாண்டு விழா நிகழ்வு 24-09-2023 அன்று காரைநகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க, பொம்மலாட்டத்துடன் அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வானது ஆரம்பமானது. இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பின்னர் காரைநகரில் உள்ள விளையாட்டு கழகங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைநகர் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. கம்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா. சுதர்ஷன் கலந்து சிறப்பித்ததுடன், காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திரு. பாலச்சந்திரன், சமூகமட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# முன்னாள் அமைச்சர் மகேஷ்வரனுக்கு காரைநகரில் சிலை வைக்க வேண்டும் – பேரின்பநாயகம்

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனுக்கு காரைநகரில் சிலை அமைக்கப்பட வேண்டும் என முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரின் ஆலோசகரும் தந்தை செல்வா அறக்கட்டளையின் நிர்வாக உறுப்பினருமான இராசையா பேரின்பநாயகம் தெரிவித்தார்.

காரைதீவு எனும் பெயர், காரைநகர் என பெயர் மாற்றப்பட்டு 100 வருடங்கள் நிறைவையொட்டி காரைநகர் அபிவிருத்தி சபையினரின் ஏற்பாட்டில் நூற்றாண்டு விழா நிகழ்வு காரைநகரில் (24-09-2023) சிறப்பாக இடம் பெற்றிருந்த நிலையில் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகர் மண்ணின் மைந்தன் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஒரு செயல் வீரன். அவர் காரைநகர் மண்ணுக்கு மாத்திரமல்ல இலங்கை முழுவதற்கும் பல நல்லவிடயங்களை செய்துள்ளார். குறிப்பாக இந்து கலாச்சாரா அமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது உலக இந்து மாநாட்டினை இலங்கையில் அதாவது கொழும்பில் நடாத்தி இருந்தார்.

அந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல்வேறுபட்ட நிகழ்வுகளை நடாத்தி காரைநகர் மற்றும் செல்வச் சந்நிதி ஆலயங்களில் புதிய மண்டபங்களைகட்டி திறந்து வைத்தார்.

அதேபோல காரைநகரில் எந்த ஒரு இடத்திலும் இல்லாதவாறு அன்றைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவின் ஒத்துழைப்புடன் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்தினை உருவாக்கி இருந்தார்,





அதன்பின்னர் வடக்கு மாகாணத்தில் எந்த ஒரு பிரதேச சபையோ பிரதேச செயலகமா புதியதாக உருவாக்கப்படவில்லை.

அது மகேஷ்வரனின் முயற்சியின் பயனாக அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது அதேபோல மகேஸ்வரனால் இலங்கை முழுவதும் சேவை ஆற்றப்பட்டுள்ளது.

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மகேஸ்வரனுக்கு காரைநகரில் பொருத்தமான இடத்தில் ஒரு சிலையொன்று வைக்கப்பட வேண்டும் அதேபோல் காரைநகர் மக்கள் மகேஸ்வரனை மறக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

# அச்சுறுத்தல் மத்தியில் மக்களின் உணர்வுக்கு பாரத தேசம் தாமதிக்காது நீதி வழங்க வேண்டும் – சபா குகதாஸ்



தியாகி திலீபனின் 36வது ஆண்டு நினைவேந்தல் அரசின் சட்ட மற்றும் இராணுவ காவல்துறை இயந்திரத்தின் அச்சுறுத்தல் மத்தியில் உணர்வு பூர்வமாக தமிழர் தாயகம் எங்கும் மக்களால் அனுஸ்டிக்கப்பட்டது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி வெளிநாடுகளில் சகல நினைவேந்தல்களையும் செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக கூறிவரும் சமநேரம் உள் நாட்டில் அரச இயந்திரத்தை பயன்படுத்தி தடைகளை ஏற்படுத்துவதும் புலனாய்வாளரைக் கொண்டு புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தல் மற்றும் நேரடி அச்சுறுத்தல் என்பன தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆகவே அரசாங்கம் நினைவேந்தல் விவகாரத்தில் இரட்டை வேடம் போடுகிறது.

உண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அச்சுறுத்தல் இல்லாவிட்டால் மாபெரும் மக்கள் எழுச்சியை காணமுடியும் இது அரசாங்கத்திற்கு தெரியும். சர்வதேசத்திற்கும் புரியும்.

தியாகி திலீபன் ஐந்து அம்ச கோரிக்கைகளை பாரத தேசத்தை நோக்கி முன் வைத்து உண்ணா நோன்பை ஆரம்பித்தமை அனைவரும் அறிந்த வரலாறு. ஆனால் இன்றுவரை அக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அவசரகால சட்டம் தற்காலிக நீக்கமே தவிர பயங்கரவாத தடைச் சட்டத்துடன் இணைந்துள்ளது. இது தொடர்பில் கடந்த காலத்தில் கசப்பான நிலையில் பாரத தேசம் இருந்தாலும் இன்று மக்களின் உணர்வுக்கு நீதி வழங்க வேண்டும்.

2009 ஆயுத போராட்டம் முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப்பட்ட பின்னர் ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் விடுதலைப் போராட்ட நினைவேந்தல்களை நினைவு கொள்ள தவறவில்லை. பல அரச எதிர்ப்புக்கள் மத்தியில் அனுஸ்டிக்கின்றனர். இதன் மூலம் ஒரு செய்தியை மக்கள் வெளிப்படுத்துகின்றனர். தமக்கான விடுதலை வேண்டும் அது இதுவரை தங்களுக்கு கிடைக்கவில்லை என்பதே ஆகும்.

அத்துடன் ஈழத்தில் நடந்த விடுதலைப் போராட்டம் வெறுமனே ஒரு அமைப்பு சார்ந்த விடயம் இல்லை அது ஒட்டுமொத்த மக்களின் விடுதலை வேட்கை என்பதை வெளிப்படுத்துகின்றது.

தியாக தீபம் திலீபனுக்கான நீதியை பாரததேசம் இனியும் அலட்சியம் செய்யாது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வழங்க முன்வர வேண்டும் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களை பலவீனப்படுத்தும் சிங்கள ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு முற்று புள்ளி வைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீவகத்தில் தியாக தீபத்தின் நினைவேந்தல்!



தியாகி திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தீவக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் - வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் நடைபெற்றன.



இதன்போது தியாக தீபம் திலீபனுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பொதுமக்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திலீபன் நினைவாக அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# விடுவிக்கப்பட உள்ள காணிகளில் பயிர் செய்கைகளை மேற்கொள்ளலாம் – அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் இருந்து விடுவிக்கப்பட உள்ள காணிகளில் பயிற்சிகளை நடவடிக்கைகளை பொதுமக்கள் ஆரம்பிக்கலாம் என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் முதற்கட்டமாக அடையாளப்படுத்தப்பட்ட காணிகள் மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

குறித்த செயற்பாடானது பிரதேச செயலக அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் இணைந்து அதற்கான வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளனர்.

ஆகவே விடுவிக்கப்பட உள்ள காணிகளில் பயிர் செய்கை நடவடிக்கைகளுக்கைகளை மேற்கொள்ள இருக்கும் பொது மக்கள் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த ஜனாதிபதித்தேர்தலை நோக்கி?



## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

ரணில் விக்ரமசிங்க உலகம் சுற்றி வருகிறார். பங்களாதேஷிடம் வாங்கிய கடனைக் கட்டி முடித்து விட்டதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. பணவீக்கம் குறைந்து வருவதாக அரச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஏறிய விலைகளில் ஒரு பகுதி இறங்கிவிட்டன. கோழி இறைச்சி 1200 ரூபாய்க்கு வந்துவிட்டது. எனினும் முட்டையின் விலை 50க்கும் 45க்கும் இடையே தளம்புகின்றது. இடையில் வறட்சி அரசாங்கத்தை அச்சுறுத்தியது. அதுகாரணமாக விவசாயிகள் குளங்களைத் திறக்கச் சொல்லிப் போராடினார்கள். மின்சார உற்பத்தியிலும் பிரச்சனைகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பருவ மழை ஆங்காங்கே பெய்யத் தொடங்கிவிட்டது. இனி மழைக்காலம். எனவே வறட்சியின் விளைவுகளில் இருந்து அரசாங்கம் தப்பக் கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு விலைகள் குறைந்திருக்கின்றன. மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்கின்றது. எரிபொருள் எரிவாயு கிடைக்கின்றது. குறிப்பாக, எரிபொருளுக்கான கியூஆர் கோட் நீக்கப்பட்டு விட்டது.

மேற்கண்டவைகளைத் தொகுத்துப் பார்த்தால் பொருளாதார ரீதியாக நாடு ஏதோ ஒரு விகிதமளவுக்கு முன்னேறுவதாகத் தோன்றும். மேலும் பன்னாட்டு நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்கான பேச்சுக்கள் தொடங்கி விட்டன. சந்தேகத்துக்கிடமின்றி அந்த உதவி கிடைக்கும். ஏனென்றால் மேற்கு நாடுகள் ரணிலை பலப்படுத்த விரும்புகின்றன. பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி போன்றவையும் ரணிலைப் பலப்படுத்த விரும்புகின்றன. ஐநாவும் ரணிலைப் பாதுகாக்க விரும்புவதாகத் தெரிகிறது. ஐரோப்பிய ஒன்றியமும் அப்படித்தான். சனல் நாலு வெளியிட்ட வீடியோவும் ரணிலைப் பாதுகாக்கும் நோக்கிலானது.

மொத்தத்தில் மேற்கத்திய நாடுகள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் வருவதைத் தடுத்து, எப்படி ரணிலை வெற்றி பெற வைக்கலாம் என்று சிந்திப்பதாகத் தெரிகிறது. அந்நாடுகளைப் பொறுத்தவரை ரணில் ஒரு தவிர்க்க முடியாத தெரிவு. அவர் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்தவர். சிங்கள பௌத்த பாரம்பரிய உடுப்புகளோடு அவரைக் காண முடியாது. அவர் எப்பொழுதும் மேற்கு நாடுகளின் உடைகளோடுதான் காட்சியளிப்பார். அவர் தன்னை உடைகளின் மூலம் ஒரு சிங்கள பௌத்த தேசியவாதியாகக் காட்டிக் கொள்வதில்லை. அவருடைய அங்லிக்கன் மதக் குடும்பப் பின்னணி அவருக்கு ஒரு பலம். எனவே மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில்தான் தெரிவு.

இந்தியா அந்தளவுக்கு ரணில் ஆர்வத்தோடு பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவதற்கான வாக்கெடுப்பு நடந்தபோது இந்தியா ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. தமிழ்த் தேசியக் கட்சிகளையும் அவ்வாறு ரணிலுக்கு எதிராக வாக்களிக்குமாறு தூண்டியது என்று தகவல்கள் வெளியாகின. ஆனால் ஆபத்தான நெருக்கடியான காலகட்டங்களில் இந்தியா தான் இலங்கைக்கு அதிகமாக உதவுகின்றது. கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போதும் இலங்கைக்கு அதிகம் உதவிய நாடு இந்தியாதான். அதன் மூலம் இந்தியா சொல்லவரும் செய்தி என்னவென்றால், இலங்கையின் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசுக் கட்டமைப்பை இந்தியா பாதுகாக்கும் என்பதுதான். அந்த அரசுக் கட்டமைப்புக்கு போர் நெருக்கடியோ அல்லது ஜேவிபி போன்ற இடது சாய்வுடைய அமைப்புகளின் போராட்டங்களோ அல்லது பொருளாதார நெருக்கடியோ ஆபத்தாக வந்தால் இந்தியா அந்த அரசுக் கட்டமைப்பை பாதுகாக்கும் ஒரு முடிவைத்தான் எடுக்கும் என்பதே கடந்த பல தசாப்த கால அனுபவம் ஆகும்.

இலங்கைத் தீவின் அரசு கட்டமைப்பை பாதுகாப்பது என்பது அதன் தர்க்க பூர்வ விளைவாக தன்னையும் பாதுகாப்பதுதான் என்பதனை ரணில் விளங்கி வைத்திருக்கிறார். எனவே இப்போதுள்ள அனைத்துலகச் சூழல், பிராந்தியச் சூழல் என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால், ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு தெரிவு அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அதேசமயம் உள்நாட்டில் நாடாளுமன்றத்தில் பலமான கட்சியாகக் காணப்படும் தாமரை மொட்டுக் கட்சிக்கு ரணிலை விட்டால் வேறு வழி இல்லை. ஏனென்றால் அக்கட்சி பதவிக்கு வருவதை அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது சனல் நாலு வீடியோவின் மூலமும் ஐநாவின் மனித உரிமை உதவி செயலருடைய அண்மைய அறிக்கையின் மூலமும் உணர்த்தப்பட்டிருக்கிறது.

போர்க் குற்றங்களுக்கு எதிரான ஐநாவின் செயற்பாடுகள் ராஜபக்சக்களுக்குத்தான் அதிகம் நெருக்கடியானவை. ரணிலுக்கு அல்ல. எனவே தமக்குச் சாதகமற்ற ஓர் அனைத்துலகச் சூழலில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதை விடவும் ரணிலுக்குப் பின் மறைவெடுப்பதற்கே ராஜபக்சக்கள் விரும்புகிறார்கள் என்று தெரிகிறது. நாமல் ராஜபக்சவை அடுத்த ஜனாதிபதியாகத் தயார்படுத்தும் இடைப்பட்ட காலகட்டத்தில் ரணிலை முன்னிறுத்தி தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் அவர்கள் முற்படலாம். ஏற்கனவே 2015 இலிருந்து 2018 வரையிலுமான காலகட்டத்தில் ரணில் ராஜபக்சக்களைப் பாதுகாத்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சக்கள் போட்டியிடும் வாய்ப்புகள் குறைவாகத்தான் தெரிகின்றன. மேலும் நாமல் ராஜபக்சவை 2028 இல் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயார்படுத்துவதற்குரிய இடைப்பட்ட காலகட்டத்தில் ராஜபக்சங்களுக்கு ஒரு நம்பத்தக்க பினாமி வேண்டும். நாடாளுமன்றத்தில் சொந்தக் கட்சியின் பலமின்றி ஒற்றை ஆளாக நிக்கும் ரணில் விக்கிரமசிங்க அதற்குப் பொருத்தமானவர் என்பது அவர்களுடைய நம்பிக்கை. மேலும் போர்க் குற்றச்சாட்டுகள் என்று வரும் பொழுது ரணிலுக்கு ஒப்பீட்டளவில் ஆபத்துக்கள் நெருக்கடிகள் குறைவு. எனவே அனைத்துலக சமூகத்தின் முன் நிறுத்தக்கூடிய ஒரு தடுப்பாக ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்சக்கள் கருதுகிறார்கள். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு கருதுகின்றது. மகா சங்கமம் கருதுகின்றது.

இந்த அடிப்படையில் கூட்டிக் கழித்து பார்த்தால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ரணில் விக்கிரமசிங்கதான் பலருடைய தெரிவாகக் காணப்படுகிறார். ஆனால் ராஜபக்சக்களுக்கு எதிராக போராடிய தன்னெழுச்சிப் போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புகளைப் பொறுத்தவரை அவர்கள் ரணிலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதேசமயம் ரணிலைத் தோற்கடிக்கத் தக்க ஒரு கூட்டை ஏற்படுத்தவும் அவர்களால் முடியவில்லை. சஜித் தன்னை ஒரு பலமான தலைவராக இனிமேல்தான் நிரூபிக்க வேண்டியிருக்கிறது. ஜேவிபி நடக்கவுள்ள தேர்தல்களில் முன்னரை விட அதிக ஆசனங்களைப் பெறலாம். ஆனால் அதற்காக ஜேவிபி ஒரு ஆளும் கட்சியாக வரும் என்று கற்பனை செய்யத் தேவையில்லை. அல்லது ஆளும் கட்சியைத் தீர்மானிக்கும் ஒரு கட்சியாக வரும் என்றும் அதிகம் எதிர்பார்க்கத் தேவையில்லை.

எனவே இப்போதுள்ள நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உற்சாகமூட்டக்கூடிய உள்நாட்டுச் சூழலும் வெளிநாட்டுச் சூழலும்தான் உண்டு. அந்த உற்சாகத்தோடு அவர் உலகம் சுற்றி வருகிறார்.

அண்மையில் ஐநா கூட்டத்தொடருக்கு போன வழியில் அவர் தெரிவித்த கருத்துக்கள் உற்றுக் கவனிக்கத்தக்கவை. தான் எந்தப் பேரரசுகளின் பக்கமும் போகமாட்டேன் என்றும், ஆனால் அதற்காகத் தான் நடுநிலைவாதி அல்லவென்றும், தான் தனது நாட்டுக்கு விசுவாசமானவர் என்றும் அவர் கூறியிருந்தார். ஆனால் அவர் நாட்டுக்குள் வாழும் எல்லா இனங்களுக்கும் உண்மையானவர் அல்ல. சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்கே உண்மையானவர் என்பதே சரி. அவர் கூறுவதுபோல இலங்கைத் தீவு எந்த ஒரு பேரரசின் பக்கமும் சாயவில்லை என்பதும் ஒரு முழுமையான உண்மை அல்ல. இலங்கை ஏற்கனவே சீன விரிவாக்கத்தின் ஒரு கருவியாக மாறிவிட்டது.

அம்பாந்தோட்டையில் இருந்து சீனாவை அகற்றுவதற்கு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் காத்திருக்க வேண்டும். ஆனால் அந்த துறைமுகம் வர்த்தக நோக்கிலானது என்று ரணில் கூறுகிறார். அதனை சீனா ராணுவ நோக்கு நிலையில் இருந்து பயன்படுத்தவில்லை என்றும் கூறுகிறார். மேலும் நாட்டுக்குள் வரும் சீன ஆய்வுக் கப்பல்கள் ராணுவ புலனாய்வுக் கப்பல்கள் அல்லவென்றும், அவை இந்தியாவுக்கு எதிரானவை அல்லவென்று அவர் கூற முற்படுகிறார். ஆனால் உண்மை அதுவல்ல. உலகில் எந்த ஒரு உளவுக் கப்பலும் வெளிப்படையாகத் தன்னை உளவுக்கப்பல் என்று சொல்லிக்கொண்டு வருவதில்லை. சீன விரிவாக்கம் எனப்படுவது வெளித்தோற்றத்துக்கு சந்தை விரிவாக்கம்தான். அவ்வாறு பொருளாதார ரீதியான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களின்மூலம் சீனா ஒரு நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது என்பதைத்தான் அம்பாந்தோட்டைத் துறைமுகம் உணர்த்துகின்றது. சீனா ஒரு நட்பு நாடு என்றால் உதவிய கடனுக்குப் பதிலாக ஒரு துறைமுகத்தை எழுதித்தா என்று கேட்காது தானே?

எனவே ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் உண்மையை மறைக்கிறார். இலங்கை எல்லா பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கின்றது என்று காட்டப் பார்க்கின்றார். ஒரு தலைவராக எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கத் தேவையான இறந்த காலம் அவருக்கு உண்டு. ஆனால் இலங்கைத் தீவு ஏற்கனவே சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்பதே உண்மை நிலை.

ரணில் தனது நாடு சீனாவோடு இல்லை என்பதனை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உணர்த்த முற்படுகின்றார். அதேசமயம் மறைமுகமாக இலங்கைக்கு சுயாதீனம் உண்டு என்றும் கூற வருகிறார்.ஆனால் இந்தப் பூமியிலே சிறிய அரசுகள் குறிப்பாக பேரரசுகளின் அருகே அல்லது பேரரசு களின் வியூகங்கள் வெட்டும் கேந்திர முக்கியத்துவம் மிக்க புள்ளிகளில் அமைந்திருக்கும் குட்டி நாடுகள் என்றைக்குமே சுயாதீனமாக இருக்க முடியாது. அவ்வாறு அவற்றைச் சுயாதீனமாக இருக்க பேரரசுகள் விட்டதும் இல்லை.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் வரையிலும் எந்த ஒரு பேரரசும் தனக்கு எதிராக உள்நாட்டு சக்திகளை தூண்டிவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொள்கிறார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இடையே எந்த ஒரு வெளிச் சக்தியும் நாட்டைக் குழப்பிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை அவருடைய நடவடிக்கைகளில் காணப்படுகின்றது. அண்மையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிகழ் நிலை பாதுகாப்புச் சட்ட மூலமும் அந்த நோக்கமுடையதே. தன்னுடைய அரசியல் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை இழக்க அவர் தயாரில்லை.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் — சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி மன விரக்தியால் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

மனவிரக்தியடைந்த இளம் யுவதி ஒருவர் இன்று காலை தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் டானுகா (வயது 23) என்ற யுவதியை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவரது தாயார் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் தந்தை இரண்டாவது திருமணம் செய்த நிலையில் சித்தியுடனே இவர் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 6ஆம் மாதம் அவரது மாமா உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவரது 90வது நாள் சடங்கிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து மனவிரக்தியுடன் காணப்பட்டார். இந்நிலையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தியாக தீபத்திற்கு நினைவேந்தல்!



தியாக தீபம் திலீபன் அவர்களது 36வது ஆண்டு நினைவேந்தலானது இன்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

அவர் 12 நாட்கள் நீராகாரம் கூட அருந்தாமல், இந்திய அரசிடம்



ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணா விரதம் இருந்து, இதே நாளில் மு.ப 10.48 மணியளவில் இவ்வுலகை விட்டு நீக்கினார். அந்தவகையில் அவர் இவ் உலகை விட்டு நீங்கிய நேரத்திற்கு இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு, சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தியாக தீபத்தின் நினைவாக மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# திருகோணமலையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரின் திடீர் சுற்றிவளைப்பில் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!



திருகோணமலையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கிண்ணியா கச்சக்கொடித்தீவு பகுதியில் உள்ள கடை ஒன்றில் விலை பட்டியல் காட்சிப்படுதாமல் விற்பனைக்காக ன பதுக்கி வைத்த 50 கிலோக்கிராம் கீரிச்சம்பா அரிசி கைப்பற்றப்பட்டது. குறித்த சுற்றிவளைப்பானது 25-09-2023 இடம்பெற்றுள்ளது.

மேலும், திருகோணமலை நகரில் விலைப்பட்டியலின்றி விற்பனை செய்த மூன்று கடை உரிமையாளர்கள் உட்பட, திருகோணமலை பொது வைத்தியசிலையின் முன்னால் உள்ள கடையில் மென்பானம் போத்தலில் குறிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்த ஒருவருக்கும் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களை திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேலும் தெரிவித்தனர்.

# தியாக தீபத்தின் படத்தினை கையில் பச்சை குத்திய இளைஞன்!



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவர் தனது கையில், தியாக தீபத்தின் உருவ படத்தை கையில் பச்சை குத்தி இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்து இருந்தது.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்திற்கு அருகில் இன்றைய தினம் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞனின் கையிலையே பச்சை குத்தி இருந்தது.

குறித்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

# அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பினால் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்புக்கான மருத்துவ அவசர ஊர்தி வழங்கி வைப்பு



அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரில் இயங்கிவரும் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்புக்கான மருத்துவ அவசர ஊர்தி வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் 27-09-2023 அன்று இடம்பெற்றது.

அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் தவராசா காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மருத்துவ அவசர ஊர்தியினை உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்பினரிடம் கையளித்தனர்.

சுமார் ஒரு கோடியே முப்பது இலட்சம் பெறுமதியான இந்த ஊர்தி கையளிக்கும் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க. கனகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி. குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட செயலக உதவி மாவட்ட



செயலாளர் திருமதி. லிசோ கேகிதா முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி வீ. சண்முகராஜா ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ. றமேஸ் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் உறுப்பினர்கள், அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் உறுப்பினர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வட மாகாண ரீதியிலான உலக சுற்றுலா தினம்!



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுற்றுலா தின நிகழ்வுகள் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளதாக வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

27-09-2023 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செப்டம்பர் 27ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் உலக சுற்றுலா தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு 1980 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்தம் இடம்பெற்று வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளாக இந்த உலக சுற்றுலா தினம் அனுஸ்டிக்கப்படவில்லை, காரணம் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலை, கொரோனா தொற்றினுடைய தாக்கம் என்பவற்றினால் வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தினால் இதனை நடாத்த முடியவில்லை.

எனவே இந்த ஆண்டு நாங்கள் இதை சிறப்பான முறையில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் வெளிப்புறத்தில் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை சிறப்பான விதத்தில் பல்வேறு கலை நிகழ்வுகள், காட்சிக் கூடங்கள் என்பவற்றை கொண்டு இதனை நடாத்த இருக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் மக்களுக்கு சுற்றுலாத் துறையினுடைய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இதனுடைய நோக்கமாக இருக்கின்றது. நாங்கள் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிட்டு பார்க்கின்ற போது வடக்கு மாகாணத்தில் சுற்றுலா துறையினுடைய வளர்ச்சி, அது பற்றிய விழிப்புணர்வு மிகக் குறைவாக இருக்கின்றது, எனவேதான் கடந்த காலங்களை விட இவ் ஆண்டு முதன் முதலாக வெளிப்புறத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வாக இதனை நாங்கள் வடமாகாண சுற்றுலா பணியகத்தினுடைய முகாமைத்துவத்தினுடைய அங்கீகாரம், வடமாகாண ஆளுநருடைய நெறிப்படுத்தலுக்கும் அமைய 29 ஆம் திகதி கொண்டாடுவதற்கு இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு நீதிபதிக்கான அச்சுறுத்தல் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் கண்டனம்

- நடராசா லோகதயாளன்





முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகும் நிலைக்கு தள்ளப்பட்டது குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் சிவஞானம் சிறீதரன் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உடன் நாடு திரும்பி இந்த விடயம் தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். அவர் மட்டுமல்ல சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரட்ணமும் நீதிபதிக்கான அச்சுறுத்தல் குறித்து பதிலளிக்க கடமைபட்டுள்ளார் என்று தனது டிவிட்டரில் பதிவிட்டுள்ளார் மனோ கணேசன்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்கள், தன்மீது தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுவந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்குநிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது என தமிழ்த் தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நீதிபதி சரவணராஜா அவர்கள் கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதிய நாடாளுமன்ற உரையிலும், அதன்பின்னர் பொதுவெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார் என்கிறார் சிறீதரன்.

அதன்பின்னர் “குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடு செய்வதற்கு, சட்டவரன்முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்ட மாஅதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்”.

2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி. சிறிநிதி நந்தசேகரன் அவர்கள் மீது, இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியை அடியொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒருவர்மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையும் மெல்லமெல்ல இராணுவமயப் படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது என்றும் கூறினார் சிவஞானம் சிறிதரன்.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பதுபற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் என்றார் யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

# வடக்கில் இருந்து தொடர்ச்சியாக வெளியேறும் அதிகாரிகள்!

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட நிர்வாகங்களில் இருந்து 133 உத்தியோகத்தர்கள் நீண்ட விடுமுறையிலும் 81 உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகம் தகவல் அறியும் சட்ட மூலத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அதிக பொருளாதார நெருக்கடி காரணமாக அரச உத்தியோகத்தர்கள் விரும்பினால் 5 வருட விடுமுறை பெற்று வெளிநாடுகளிற்குச் செல்ல முடியும் என அரசு 2022 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சுற்று நிருபம் மூலம் அறிவித்தல் வெளியிட்டது.

இந்த அறிவித்தலைப் பயன்படுத்தி பலர் நாட்டில் இருந்து வெளியேறும் நிலையில் வடக்கில உள்ள மாகாண மற்றும் மத்திய அரசிற்கு உட்பட்ட திணைக்களங்களில் பணியாற்றும் பலரும் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

இதில் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் மட்டும் 6 தரங்களைச் சேரந்த ஊழியர்களில் இருந்து இதுவரை 81 அரச ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வடக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலக நிர்வாகம் வழங்கிய தகவல் அறியும் சட்டத்தின் கீழான பதிலில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாண சபையின் கீழ உள்ள இணைந்த சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையே இவ்வாறு காணப்படுகின்றது. இதன்பால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 47 பேரும் முகாமைத்துவ உதவியாளர்கள் 21 பேரும், அலுவலக உத்தியோகத்தர்கள் 6 பேரும், சாரதிகள் 6 பேரும் வெளிநாடு செல்வதற்கான அனுமதிகளைப் பெற்று வெளியேறியுள்ளனர்.

இவ்வாறே தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருவருமாகவே இந்த 81 உத்தியோகத்தர்களும் வெளிநாடு செல்வதற்கான விடுமுறையைப் பெற்று வெளயேறியுள்ளனர். 81 உத்தியோகத்தர்கள் மட்டுமே வெளிநாட்டிற்கான அனுமதியை பெற்றபோதும் 133 உத்தியோகத்தர்கள் 5 வரு விடுமுறையினைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படும் அதே நேரம் மேலும் 10 உத்தியோகத்தர்கள் விடுமுறைகளிற்கு விண்ணப்பித்த அனுமதி நிராகரிக்கப்பட்டமையும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கு உட்படாது மத்திய அரசின் கீழ் உள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களில் இருந்தும் பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேநேரம் மாவட்டச் செயலகங்களிலில் இருந்து வெளிநாடு சென்றவர்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 14 உத்தியோகத்தர்களும், வவுனியாவில் இருந்து 6 பேரும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 12 பேரும் பயணித்துள்ளதாக மாவட்டச் செயலகங்கள் தபவல் அறியும் சட்டத்தின் கீழ் உறுதி செய்துள்ளனர்.

இவ்வாறு செல்லும் உத்தியோகத்தர்கள் விரைவில் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களோ அல்லது இயலாமை கொண்ட உத்தியோகத்தர்களோ கிடையாது இதனால் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி போன்று அதிகாரிகள் நெருக்கடியும் எழும் நிலை ஏற்படும் என்றே கூறப்படுகின்றது.

இதற்கு ஓர் உதாரணமாக யாழப்பாணம் மாவட்டச் செயலகத்தின் பதிவாளர் பிரிவிலே காணி உறுதிகளின் பிரதி எடுப்பதில் இருந்த துரித சேவையான ஒரே நாளில் பிரதியை பெற்றுக்கொள்ளும் சேவை முழுமையாக இழுத்து மூடப்பட்டு சாதாரண சேவை மட்டுமே இடம்பெறுகின்றது. இந்த ஒரு நாள் சேவை மூடப்பட்டதற்கு துறைசார் அறிவுகொண்ட உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணம் அல்ல, துறை சார் அனுபவம் கொண்ட சிற்றூழியர்கள் அதாவது அலுவலக உதவியாளர்கள் இன்மையே காரணம் என மாவட்டச் செயலகம் கூறுகின்றது.

சிற்றூழியர் இன்மை காரணமாகவே ஒரு மாவட்டத்தின் காணி உறுதி வழங்கும் செயலகம் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதானால் துறைசார் உத்தியோகத்தர்கள் அதுவும் நீண்ட அனுபவம் கொண்டேர் நாட்டை விட்டு வெளயேறுவதனால் ஏற்படும் அபாயத்திற்கான சங்கு தற்போதே ஊதப்படுகின்றது.

இதேநேரம் வைத்தியர்கள், பொறியிலாளர்களும் தொடர்ச்சியாக வெளயேறும் படலமும் நீண்டு செல்கின்றது. இருந்தபோதும் இதனை தடுக்கவோ அல்லது மாற்று வழி காணவோ வழியின்றி அரசும் திணறுகிறது.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
| --- | --- |
| எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடதய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis<br>Asthma, Sinusitis, Rhinitis Allergies<br>Stress, Migraine & All Types of Headaches<br>Diabetes, Gastric Pain, Ulcer<br>Menstruation<br>Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் மேல்முறையீடு மீது இன்று தீர்ப்பு: 1992 முதல் வழக்கு கடந்து வந்த பாதை

இந்திய செய்திகள்

தருமபுரி வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் 215 பேருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் தண்டனைக்கு எதிரான மேல் முறையீட்டின் மீது சென்னை உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கவுள்ளது.தருமபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ள கல்வராயன் மலைத்தொடரின் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி மலைக்கிராமம். பெ.தாதம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட இக்கிராமத்தில் 1992ம் ஆண்டு சுமார்655 பேர் வசித்து வந்தனர்.



இவர்களில் 400க்கும் மேற்பட்டவர்கள் விவசாயம் மற்றும் வனத்தை சார்ந்து வாழும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். வாச்சாத்தி கிராமப் பகுதிகளில் கடந்த 1992ம் ஆண்டு ஜூன் 20ம் தேதி சந்தனமரம் வெட்டிக் கடத்தல் மற்றும் விற்பனை செய்வதாகக் கூறி 155 வனத்துறையினர், 108 போலீஸார், 6 வருவாய் துறையினர் என 269 பேர் உள்ளடங்கிய கூட்டுக் குழுவினர் சோதனையிட்டனர். வீடு,வீடாக நடத்தப்பட்ட சோதனையில் அங்கிருந்த சில வீடுகள் மற்றும் ஏரிப்பகுதியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த சந்தனக்கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக அங்கிருந்த 90 பெண்கள் உள்பட 133 பேர் கைது செய்யப்பட்டனர்.சோதனை நடவடிக்கையின்போது கிராம மக்கள் மீது கடும்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 18 மலைவாழ் பெண்கள் பாலியல் ரீதியாக வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், வீடுகள் சூறையாடப்பட்டதாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் அரூர்காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது.இந்த சம்பவம் குறித்து அப்போதைய தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க பொதுச் செயலாளராக இருந்த சண்முகம் மற்றும் நிர்வாகிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதற்கு பின்னரே வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இருப்பினும் உரிய விசாரணை ஏதும் நடைபெறவில்லை எனக்கோரி வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட பெண்கள் 1993 ம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 1995ம்ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி சிபிஐக்கு வழக்கு மாற்றப்பட்டது.சிபிஐ விசாரணையில், குற்றம்சாட்டப்பட்ட வனத்துறையைச் சேர்ந்த 155 பேர், போலீஸார் 108 பேர், வருவாய்துறையினர் 6 பேர் என மொத்தமாக 269 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் 1996ல் சிபிஐ கோவை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து கோவைமற்றும் கிருஷ்ணகிரி நீதிமன்றங்களில் வழக்கு நடத்தப்பட்டு, 2008ல் தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.வழக்கை விசாரித்த தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி குமரகுரு, கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் 29ம் தேதி தீர்ப்பு அளித்தார்.

அதில் குற்றம் சாட்டப்பட்ட 269 பேரில் தீர்ப்பு நாளன்று உயிருடன் இருந்த 215 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டது. இதில் 12 பேருக்கு 10 ஆண்டு சிறை, 5 பேருக்கு 7 ஆண்டு சிறை, மற்றவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது. நாட்டிலேயே ஒரு வழக்கில்அதிக அளவிலான குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்ட வழக்காக இது இருந்ததால் நாடு முழுவதும் பெரும் அதிர்வை இத்தீர்ப்பு ஏற்படுத்தியிருந்தது.இந்நிலையில் தண்டனையை எதிர்த்து குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பி.வேல்முருகன், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

தொடர்ந்து இவ்வழக்கு சம்பந்தமான இடங்கள் மற்றும் மக்களிடையே நேரில் விசாரணை செய்யவும் முடிவு செய்து அதன்படி கடந்த மார்ச் 4ம் தேதி வாச்சாத்தி கிராமத்துக்கு நீதிபதி பி.வேல்முருகன் வருகை தந்தார்.சம்பவத்தில் தொடர்புடையப் பகுதிகளாக கருதப்படும் பழங்குடிகள் தொடக்கப்பள்ளி, ஏரிப்பகுதி, ஆலமரம், தண்ணீர் தொட்டி, மலைப்பகுதி ஆகியவற்றை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து பேசினார்.இந்நிலையில் மேல் முறையீட்டு வழக்கின் மீதான தீர்ப்பு இன்று (29ம் தேதி) அளிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வழக்கில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. 2011 செப்.29ல் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டிருந்த நிலையில், சரியாக 12 ஆண்டுகளுக்கு பின்னர் அதே தேதியான இன்று (29 ம் தேதி) மேல் முறையீட்டில் தீர்ப்பு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இசை நிகழ்ச்சி நடத்த முன்பணமாக பெற்ற ரூ.29.50 லட்சத்தை ஏ.ஆர்.ரஹ்மான் திருப்பி தரவில்லை: இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் போலீஸில் புகார்



இசை நிகழ்ச்சி நடத்த முன்பணமாகப் பெற்றுக் கொண்ட ரூ.29.50 லட்சத்தை இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் திருப்பித் தரவில்லை என்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தினர் போலீஸில் புகார் அளித்துள்ளனர். பிரபல திரைப்பட இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மீது இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தினர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று புகார் மனு ஒன்றை அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:

தேசிய அறுவை சிகிச்சை நிபுணர்கள் மாநாட்டை, சென்னையில் கடந்த 2018, டிசம்பர் 26 முதல் 30ம் தேதிவரை நடத்த திட்டமிட்டோம். அதில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை நிகழ்ச்சியை நடத்துவதற்காக அவருக்கு முன்தொகையாக ரூ.29 லட்சத்து 50ஆயிரம் கொடுத்தோம். ஆனால், நிகழ்ச்சி நடத்த இடமும் அனுமதியும் தமிழக அரசிடமிருந்து கிடைக்கவில்லை. எனவே, முன்தொகையை திரும்பத் தரும்படி அவருக்கு கடிதம் அனுப்பினோம். ஏ.ஆர்.ரஹ்மான் அதற்கு ஒப்புக்கொண்டு, அந்த தொகைக்கான பின் தேதியிட்ட காசோலையை கொடுத்தார். ஆனால், சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கில் பணம் இல்லையென காசோலை திரும்ப வந்துவிட்டது.நாங்கள் கொடுத்த பணத்தைத் தரும்படி கடந்த 5 ஆண்டுகளாக ஏ.ஆர். ரஹ்மானிடம் தொடர்ந்து கேட்டு வருகிறோம். ஆனால், இதுவரை எங்கள் பணம் திருப்பி தரப்படவில்லை. எனவே, ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் அவரது செயலாளர் செந்தில்வேலவன் ஆகியோர் மீதுஉரிய நடவடிக்கை எடுத்து, எங்களது பணத்தை திரும்ப பெற்றுத்தர வேண்டும் என்று புகார் மனுவில் கூறியிருந்தனர்.

இந்நிலையில், இந்தக் குற்றச்சாட்டை ஏ.ஆர். ரஹ்மான் தரப்பில் செந்தில்வேலவன் மறுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியது:ஏ.ஆர்.ரஹ்மானுக்கு சம்பந்தமில்லை: 2018ம் ஆண்டு 'கிஷிமிசிளிழி 2018 சிலீமீஸீஸீணீவீ' என்ற 3 நாள் நிகழ்வுக்காக ஏ.ஆர். ரஹ்மான் இசை நிகழ்ச்சிமற்றும் வேறு சில நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக எங்கள் நிறுவனத்தை தொடர்பு கொண்டார்கள். நாங்கள் ஏ.ஆர்.ரஹ்மானிடம் பேசி அனுமதி பெற்றோம். இதன்பின் நிகழ்ச்சி நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம்.அப்போது, இசை நிகழ்ச்சிக்காக ஏ.ஆர்.ரஹ்மான் பெயரில் ரூ.25 லட்சம், வேறு நிகழ்ச்சிக்காக ரூ.25 லட்சம் என 2 காசோலைகளை அந்த அமைப்பினர் வழங்கினர்.

அவர்களிடம் நடந்த பேச்சுவார்த்தையில் நீங்களாகவே (சம்பந்தப்பட்ட அமைப்பு) நிகழ்ச்சிகளை நிறுத்தினால் அல்லது ரத்து செய்தால் கலைஞர்களுக்கு வழங்கப்படும் முன்பணம் திரும்பி தரப்படாது என குறிப்பிட்டு இருந்தோம். அதன்படி நிகழ்ச்சியை அவர்கள் ரத்து செய்தால் முன்பணம் திரும்பி வழங்க தேவையில்லை என்பது உள்ளிட்ட நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டு கையெழுத்தானது.இதற்கிடையே, இசை நிகழ்ச்சியை அந்த அமைப்பால் நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது. எனவே அவர்கள் இசை நிகழ்ச்சியை ரத்து செய்தனர். அந்த அமைப்பினரே இசை நிகழ்ச்சி ரத்துசெய்த நிலையிலும் ஏ.ஆர்.ரஹ்மான் பெயரில் வழங்கப்பட்ட ரூ.25 லட்சத்துக்கான காசோலை அந்த அமைப்புக்கு திருப்பி வழங்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் தேவையில்லாமல் ஏ.ஆர். ரஹ்மானின் பெயரை இந்த புகாரில் இணைத்துள்ளனர். அவருக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.சட்டப்படி எதிர்கொள்வோம்: மேலும், ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கலைஞர்களுக்கு கொடுக்கப்பட்ட முன்தொகை திருப்பி வழங்க தேவையில்லை. புகாரை சட்டப்படி எதிர்கொள்வோம். அந்த அசோசியேஷன் மீது நாங்கள் வழக்கு தொடர உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# நடிகர் விஜய் அரசியலுக்கு வருவது நாம் தமிழர் கட்சிக்கு வலிமைதான்: சீமான் கருத்து



கும்பகோணத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், செய்தியாளர்களிடம் கூறியது:மகளிர் உரிமைத் தொகை திட்டம், பெண்களுக்கான வளர்ச்சித் திட்டம் கிடையாது. இந்தத் தொகையைப் பெண்களின் முன்னேற்றத்துக்கான நிரந்தர வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு பயன்படுத்தி இருக்க வேண்டும்.

காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை திறக்குமாறு வலியுறுத்திய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கர்நாடகாவில் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்துவது கண்டிக்கத்தக்கது. காங்கிரஸ், பாஜக ஆகிய 2 கட்சிகளுக்கும் பெயர்தான் மாறுகிறதே தவிர, பொருளாதாரம், வெளியுறவு, மருத்துவம் என கொள்கைகள் அனைத்தும் ஒன்று தான். இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் நடத்திய இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குளறுபடிகளை சுட்டிக்காட்டி, நடிகர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள லியோ திரைப்பட பாடல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு அரசு அனுமதி மறுத்தது வேடிக்கையானது.இதை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

காவல் துறையால் உரிய பாதுகாப்பு வழங்க முடியவில்லை என்றால், பாதுகாப்பு வழங்க முடியவில்லை எனக் கூறி மன்னிப்பு கேட்க வேண்டும். நடிகர் விஜய் அரசியலுக்கு வரப்போகிறார் என தெரிவதால், அரசு நெருக்கடி கொடுக்கிறது. அவர் அரசியலுக்கு வருவதால் நாம் தமிழர் கட்சிக்கு வலிமைதான் என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் கொட்டும் மழையின் மத்தியில் நினைவேந்தல்!

பு. கஜிந்தன்



தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும், நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும், நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.





அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06க்கும் மேற்பட்ட ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

நினைவு சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும், மழையையும் பொருட்படுத்தாது, நினைவிடத்தில் கூடி இருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்தம்ச கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார்.

அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களில் அவரது உயிர் பிரிந்தது.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக மதுபானசாலை அமைக்க அனுமதிக்க கூடாது என சி.வி.கே சிவஞானம் முன்வைத்த கோரிக்கை நிராகரிப்பு!



யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக எந்த ஒரு மதுபானசாலையும் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் தீர்மானம் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்த போதிலும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இன்று இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெல்லிப்பளையில் புதிதாக மதுபான சாலை ஒன்று அமைக்க எடுத்த முயற்சிக்கு பொதுமக்களின் எதிர்ப்பு காணப்பட்டமை தொடர்பில் விவாதிக்கப்பட்ட போதே வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் மேற்படி கோரிக்கையினை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மதுபானசாலைகள் போதுமான அளவு உள்ளது இனி யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மதுபான சாலைகள் எதுவும் புதிதாக தேவையில்லை. புதிய மதுபான சாலைகளுக்குரிய அனுமதியினை வழங்கக் கூடாது என தீர்மானிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த விடயத்தில் தலையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எத்தனை மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்ற ஒரு நியதி உள்ளது அதனை பரிசீலித்து தான் தீர்மானிக்க முடியும் என தெரிவித்ததற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 146 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்றும் அதாவது கள்ளுத் தவறணைகளையும் சேர்த்து எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவை தலைவரின் தீர்மானம் கைவிடப்பட்டது.

# இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் கடற்படையினர் தயக்கம் – அமைச்சர் டக்ளஸ்!





சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தும் செயற்பாட்டினை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும் இந்திய மீனவர்களை கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுவதாக கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது அதற்கு கடந்த 20 வருட காலமாக நான் முயற்சித்து வருகின்றேன். இந்த அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்காக பல பேச்சுவார்த்தைகளிலும் நான் கலந்து கொண்டேன். ஆனால் அந்த பேச்சுவார்த்தைகளில் எந்த சாதகமான முடிவும் எட்டப்படவில்லை அதேபோல இலங்கை கடற்படையினரும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் பின்னடிப்பதாகவே நான் கருதுகின்றேன்.

நான் கடந்த சில நாட்களாக ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றேன். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் அங்குள்ள முதலமைச்சருடன் கலந்துரையாடி ஒரு உண்மையான நிலைமையினை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றேன்.

எனவே எதிர்வரும் காலத்தில் இந்தியா சென்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மீனவர்களின் உண்மையான நிலையினை இந்திய மீனவர்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் இதற்கு ஒரு சாதகமான முடிவினை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சனை, இலங்கையில் மாத்திரமல்ல இது ஏனைய உலக நாடுகளிலும் காணப்படுகின்றது இரு நாடுகளின் பிரச்சனை இரு நாடுகளுடனான பேச்சு வார்த்தை மூலமே தீர்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

# இரவு நேரத்தில் கடல் அட்டைகளை பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது!

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் இரவு நேரத்தில் சட்டவிரோதமாக அட்டைகளை பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட மூவரும் மன்னாரை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடமைகளுடன் மூவரும் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இரவு நேரத்தில் பல படகுகள் சட்டவிரோதமாக அட்டை பிடிப்பதாக கடற்படையினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ஆயினும் பல படகுகள் தடைசெய்யப்பட்ட அட்டை தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் நபிகள் நாயகத்தின் ஜனதின துவாப் பிராத்தனை

மிலாத் நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் விஷேட துவாப்பிராத்தனைகள் குப்தா பிரசங்கங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் யாழ்ப்பாணம் நாவாந்துறை ஜின்னா பள்ளிவாசலில் விஷேட துவாப்பிராத்தனையும், குப்தா பிரசங்கமும் இடம்பெற்றன.

விஷேட துவாப்பிராத்தனை குப்தா பிரசங்கத்தினை மௌலவி க. ஜமீன் தாபீர் நடாத்திவைத்தார். இதில் இஸ்லாமிய நண்பர்கள் கலந்துகொண்டனர்.




SARAS SEWING INSTITUTE
CANADA
SARAS
தையற் பயிற்சி நிலையம்
Saree Blouse Only in 4 Classes
இப்பயிற்சியை முற்றாக முடிப்பவர்களுக்கு
(Full Course) Certificate வழங்கப்படும்.
Sewing Classes Followed by Scientific Method
Morning Class: 10:00 AM
Evening Class: 4:00 PM
(Morningside & Military Trail)
LUXMY VARATHARAJAN
(416) 716-9183


SARAVANAA BHAVAN®
HSB CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புரட்டாசி சனி
விரத சாப்பாடு
SPECIAL BUFFET
at Scarborough
SPECIAL THALI
at Mississauga
செப்டம்பர் 30, அக்டோபர் 07 மற்றும் 14
ஆகிய தேதிகளில்
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4




MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

**MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)**

2901 Markham Rd Scarborough, ON M1X 0B6
(Markham and McNicoll Intersection)

**MORE DOCTORS, MORE CARE**

MMUCC now has more doctors to serve you.
Unit 11 has expanded to Unit 6 as well.

The number of doctors working in the Walk-In Clinic / Urgent Care have increased to seven (07) recently.

We will continue to open all 365 days a year.
Patients Walk-In without appointment can self-register at the clinic.

The existing online booking from 12am for the same day appointment, will continue for both unit clinics as before @ medcentrehealth.com

Visit us today and experience the convenience & excellence of MEDCENTRE HEALTH

**MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)**

Walk-In Clinic (வோக் இன் கிளினிக்) மற்றும் Urgent Care (துரித மருத்துவ சேவை).

இதுவரை காலமும் Unit 11 ல் (யூனிட் இலக்கம் 11ல்) மட்டும் இடம்பெற்று வந்த மருத்துவ சேவைகள், இப்போது Unit 6 & 11 (யூனிட் 11 உடன் 6 ம் யூனிட்டுமாக இரண்டு யூனிட்டிகளுக்கும்) விரிவாக்கப்பட்டுள்ளது.
இந்த கிளினிக்குகளில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் ஏழாக (7) அதிகரிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல ஒன்லைன் (online) வழியாக முற்கூட்டியே பதிவு (Book) செய்யலாம்.

அல்லது நேரடியாக வருகைதர முடியும்.

+1 416-609-3333
medcentrehealth.com


www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
UTHAYAN CULTURAL SHOW - 2023
and 27th Year Celebration
Tasty தமிழா
Presents
உதயன் பல்சுவைக் கலைவிழாவும்
விருது வழங்கலும்-2023
DATE: 15-10-2023 Sunday
TIME: 6:00 PM
VENUE:
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8
கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை
இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக
"பொன்னியின் செல்வன்" புகழ்
வி. எம். மகாலிங்கம் அவர்களும்
கனடியப் பாடக பாடகிகளும்
மேடையை அலங்கரிப்பார்கள்
POWERED BY:
VIBRANT HOSPITALITY GROUP
Latika Gold House
ARABI
FINDER
TICKETS
VIP $15
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512


அகிலமெங்கும் ஆழி புதுமை படைக்க விழா எடுத்து வருகின்றது கலைஞர்களுக்கு ஊடாக தமிழ் வளர்க்க விழா எடுத்து வருகின்றது.
அனைத்துலக நாடுகளில் விழா எடுத்த வரும் தமிழாழி கனடா ரொரன்றோ மாநகரிலும் மாபெரும் விழா எடுக்கின்றது.
ரொரன்றோ, ஒட்டோவா, மொன்றியல் ,கோன்வால் கலைஞர்கள் மற்றும் வர்த்தக, ஊடகங்களின் ஆதரவோடு
DJ FOR ALL EVENTS
கனடா தமிழாழி பேரவையும்,
தமிழாழிக்காட்சியும் ரொரன்றோவில் நடத்தும்
தமிழாழி விழா -2023
THAMILAALI SHOW-2023
30-09-2023 சனி மாலை 5.00 மணி
131 Birchmount Rd, Scarborough,
ON, M1N 3J7, Canada
உதயன்
ANBIN SANGAMAM
பூநகரியான் பொன். முருகவேள் அவர்களின்
மணிவிழா விருதுகள் வழங்கல்
உதயன் வாரதளிகை முதன்மை ஆசிரியர்
திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம்
பாட்டருவி க.உயிரவன். நாடகக் கலைஞர் செல்வராசா
மற்றும் முன்னாள் அதிபர் நடராசா இராமதுலசிங்கம்
ADTQ - QTDA
நகைச்சுவைக் கதம்பம்
கலைஞானி கணபதி ரவிந்திரன்
தமிழொளி செ.நந்தகுமார்
பக்திப் பாடல்கள்
ஈழத்துப் பாடல்கள்,
திரையிசை பாடல்கள்
பாடகர் கா.பவானந்தன்,சுப்.தவராசா,
பொன். கிருசுணன்,திரு. தர்மராசா
யெ.அபிராமி,யெ.ஆதவன், யான்சி.
SHASHMIYA SASIKARAN
SHARMIYA SASIKARAN
மொன்றியல்
பனா கீதாலயத்தின்
சங்கீதம்
பரதநாட்டியம்
ரொரன்ரோ
கலை நாட்டியாலையத்தின்
மொன்றியல் தமிழாழி குழு
கலைச்செல்வி குழுவினர்
Samskrithi school of Arts
திரையிசை நடனம்
நிமால்யின் சங்கீத மைந்தர்,
மொன்றில் தமிழாழி அலைகள்,
ரொரன்ரோ கிங் குழு,
மொன்றியல் இன்விட்ரி குழு
Misrika குழுவினர்
பாவலர் அகணி சுரேசின் கவியரங்கம்
மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை
மருத்துவர் போல் யோசப்
பவானி தர்மகுலசிங்கம்,சயந்தன் பசுபதி
மாவிலி மைந்தன் சண்முகராசா
பாட்டருவி க. உயிரவன்
TAMIL EVENTS PHOTOS
நுழைவுக் கட்டணம் இலவசம்
கவிதை திரு கா. பவானந்தன், ஐயாத்துரை யெகதீசுவரன், நிவேசலா சாருகர்சன்
சிந்தனை சிறப்புமிகு பேச்சுக்கள்,கலைஞர்களுக்கு மதிப்பளித்தல்
அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
514 867 1551, 514 566 9407, 416 880 6874, 5142790463
thamilaali@gmail.com Facebook :- Thamilaali www.thamilaali.com
விழா தொகுப்பாளர்
INFINITY CREW
PRO MAR Ltd. Awards & Promotions
Corporate Awards
Promotional Products
Laser Engraving
Pad Printing
Silk Screening
B:416-291 2344
D:416-898 4840
promarawards@gmail.com
www.promarawards.com
585 Middlefield Road, Unit #3
Toronto, Ontario. M1V 4Y5
LIVE TELECAST
Kishna
ABC DRIVING SCHOOL
5280 Ogilvy Ave,
Montreal,Qc, H3N 1M8
தளிர்
Let your dreams fly
JANANI Restaurant
6450 VICTORIA AVE, MONTREAL, QUEBEC H3W 2S6
YUGAM RADIO
தமிழாழி
CREATIVE PRODUCTION

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பணிமனை கட்டட விவகாரம்

## கடிதத்தை மீளப் பெறுகிறன் என்கிறார். பணிப்பாளர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பணிமனை கட்டடத்தை மத்திய சுகாதார அமைச்சின் பாவனைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் அவை தலைவர் சி.வி.கே. சிவஞானம் கேள்வி எழுப்பிய நிலையில் ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தை மீளப்பெறுவதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் பதில் மாகாண சுகாதார பணிப்பாளருமான வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த மேலும் தெரிவிக்கையில், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுகாதார விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாண அதிகாரத்துக்கு உட்பட்ட கட்டடம் ஒன்றை மத்திய சுகாதார அமைச்சுக்கு வழங்குவது பொருத்தம் அற்றது எனத் தெரிவித்தார்.

இவ்வாறான விடயங்கள் மாகாண அதிகாரங்கள் தொடர்பில் பலவீனத்தன்மையை ஏற்படுத்தும் எனவும் இதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என கூறினார்.

இதன் போது பதில் அளித்த வடமாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸ், தன்னிடம் கோரிக்கை அனுப்பப்பட்டதாகவும் குறித்த கடிதத்திற்கு தான் பதிலளிக்கவில்லை எனத் தெரிவித்தார்.



அது மட்டும் அல்ல அது மாகாண அதிகாரங்களை மத்திய வழங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் கடந்த காலங்களில் மாகாண பாடசாலைகளை மதிக்கு வழங்குவது தொடர்பில் நான் செயற்பட்ட விதம் அனைவருக்கும் தெரியும் எனும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த வைத்தியர் சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு அருகில் உள்ள பிராந்திய சுகாதார பணிமனை கட்டடத்தை கேட்டேன்.

ஆனால் இந்த கோரிக்கையினால் பிரச்சனை ஏற்படுமாயின் பிரச்சனைக்கு உள்ளாக விரும்பவில்லை ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தை மீளப் பெறுவதற்கான கடிதத்தை அனுப்புவதாக தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் வீடு புகுந்து சரமாரி தாக்குதல்: ஐவர் வைத்தியசாலையில்



(28-09-2023)

கிளிநொச்சியில் வெளிநாட்டு பிரஜையின் வீட்டிற்குள் குழுவொன்று நுளைந்து சரமாரி தாக்குதல் நடத்தியதில் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் 27-09-2023 அன்று நள்ளிரவு கிளிநொச்சி - திருவையாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், வீதியால் சென்ற இளைஞன் ஒருவரை இந்த குழு தாக்கியுள்ளது. சம்பவத்தை அவதானித்த தாக்குதலுக்குள்ளான வீட்டாரில் ஒருவர் தனது நண்பர் தாக்கப்படுவதாக தெரிவித்து அப்பகுதிக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில், இளைஞரின் கால் பகுதியில் தாக்குதல் மேற்கொண்ட குழுவினர் வெட்டியதாகவும், தடுத்த பெண்ணுக்கும் தாக்கியதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான இளைஞர் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை தொடர்ந்து, நள்ளிரவு 20க்கு மேற்பட்டவர்களை கொண்ட குழுவினர் வீட்டுக்குள் நுழைந்து சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டதுடன், முதியவர்களான கணவன் மனைவி இருவரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் சி.சி.ரீ.வி, மின்விளக்குகள், பிரதான வாயில் என்பவற்றை தாக்கி அழித்ததுடன், மோட்டார் சைக்கிளையும் சேதமாக்கி பின் அதனை எடுத்து சென்றுள்ளதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பெற்றோல் குண்டும் தயாரித்து வீசப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான நால்வர் வைத்தியசாலையில் வெட்டு காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவை சேர்ந்த ஒருவரும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான வெளிநாட்டு பிரஜை கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெல்ஜியம் நாட்டில் இருந்து தனது வீட்டுக்கு விடுமுறையை கழிப்பதற்காக வருகை தந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கிளிநொச்சி குற்றத்தடுப்பு போலீசார் ஆரம்பித்து முன்னெடுத்து வருவதுடன், சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சந்தேக நபர்களில் பலர் கடந்த காலங்களில் வெவ்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இரணைமடு குளத்தின் கீழ் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுகின்றமை தொடர்பில் குறித்த குடும்பம் தடுப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.



தாக்குதல் மேற்கொண்ட குறித்த குழுவில் மண் மாபியாக்களே அதிகம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது குறித்த மணல் அகழ்வு முற்றாக தடுக்கப்பட்டுள்ள நிலையில் இத்தாக்குதல் சம்பவமானது பழிவாங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறினார் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா

(28-09-2023)

இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவி துறப்பதாக அறிவித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறினார் எனவும் எமக்குக் கிடைத்த பிந்திய செய்தியொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனது பதவி விலகக் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அவர் அனுப்பியுள்ளார்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து எதிர்கொண்டுவந்த உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு, குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றிற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்துவந்தனர்.

சட்டமா அதிபர், என்னை தனது அலுவலகத்தில் 21.09.2023ம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும் படி அழுத்தம் பிரயோகித்தார்.

குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.



இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

அவர், தன்னுடைய பதவி விலகலை அறிவித்தபின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவிகள் தேசிய ரீதியில் சாதனை!



(28-09-2023)

17 வயதிற்குட்பட்ட பெண்கள் கபடி அணியினர் இம்முறை நடைபெற்ற தேசிய ரீதியிலான கபடி போட்டியில் முதலாம் இடத்தை பெற்று சாதனையை நிலை நாட்டினர்.

இரண்டாவது வருடமாகவும் தொடர்ந்து முதல் நிலையை இப்பாடசாலை தக்கவைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இச் சாதனையை கௌரவிக்குமுகமாக 28-09-2023 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பிரபல்யமான ஸ்ரீ ராம் நகை கடையின் உரிமையாளர் சாதனை புரிந்த அனைத்து வீராங்கனைகளையும் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கடையின் உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது..






EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
READY TO DELIVER
STARTING FROM $59
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $309 $249
S/S BUNK Bed (Grey) $709 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $309 $299
Back Support Queen Mattress $709 $549
Spine Comfort Queen Mattress $609 $499
5" Foam $79 $59
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $309 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7
EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $699 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $999 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $799 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $799 $499
7 pcs Dining Table $799 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
26th ANNIVERSARY
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-09-2023 திங்கள்கிழமை
(Thanksgiving Holiday)
நேரம் : மாலை, 4.00 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 26வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 09ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க Toronto நாதஸ்வர தவில் கலைஞர்களும், நாதஸ்வர வித்வான் இஞ்சிகுடி திரு. E.M. சுப்பிரமணியன் அவர்களின் கெஞ்சிற கச்சேரி வயலின், மிருதங்கம் கடம், மோர்சிங் பக்கவாத்தியத்துடன் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. அத்துடன் இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் திருமஞ்ஞானம் T.P.N. ராமநாதன் அவர்களும் நாதஸ்வர வித்துவான் G. யுகராஜ் அவர்களும் வருகை தந்து விழாவை சிறப்பிக்க உள்ளார்கள். அத்துடன் Toronto ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

கனடிய செய்திகள் Canadian News

## Satguru Bodhinatha Veylanswami, from Sanmaarga Iraivan Temple, Hawai made a "Devine Speech" at Scarborough Sri Varasithy Vinayagar Temple.

# ஹவாய் சன்மார்க்க இறைவன் ஆலய சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்கள் கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் ஆற்றிய "ஆன்மீகச் சொற்பொழிவு"

ஹவாய் தீவில் அமைந்திருக்கும் சன்மார்க்க இறைவன் ஆலயத்தைச் சேர்ந்த சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்கள் கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் "ஆன்மீகச் சொற்பொழிவு" ஒன்றை ஆற்றினார். அவரோடு இணைந்து ஹவாய் ஆலயத்திலிருந்து சற்குரு சண்முகநாத சுவாமி அவர்களும் வருகை தந்திருந்தார்.

முதலில் ஆலய பூஜைகளில் கலந்து கொண்ட சுவாமிகள் இருவரும் பின்னர் சுவாமி உள் வீதி வலம் வந்ததும் ஆலயத்தின் வாசலில் இருந்து மாலைகள் அணிவிக்கப்பெற்று வரவேற்கப்பெற்றும் உள் வீதிவழியாக வசந்த மண்டபத்திற்கு அழைத்து வரப்பெற்றனர்.









தொடர்ந்து ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்களை உரையாற்றும் வண்ணம் அழைத்தார்.

சுமார் அரை மணிநேர தனது உரையில் சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்கள் கேள்வியும் பதில்களும் அடங்கிய உரை வடிவத்தை அங்கு வாசித்தார். அந்த உரை மிகவும் எளிமையாகவும் அடக்கமாகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவரது ஆங்கில உரையை தமிழாக்கம் செய்து அங்கு கூடியிருந்த அடியார்களுக்கு வழங்கப்பெற்றன.

உரையாற்றிய பின்னர் சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்கள் ஆலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவை செவிமடுத்த அனைத்து அடியார்களுக்கும் பிரசாதம் வழங்கியும் ஆசி வழங்கியும் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டினார்.

**செய்தியும் படங்களும்:**
**சத்தியன் - ஸ்காபுறோ**





# US Congressional Lawmakers Urge Strong Action Against Sri Lanka for Torture

- by Siva Parameswaran



Twelve members of the U.S. Congress have urged Secretary of State Anthony Blinken to ensure the United States holds Sri Lanka accountable under the Convention against Torture.

Their l etter speaks about the brutal torture endured by the Tamils at the hands of the military and other government agencies.

Led by Democratic Congresswoman Summer Lee from Pennsylvania's 2th Congressional district for over a decade, they have called upon the US government to "formally hold Sri Lanka responsible for its human rights abuses and violations of International humanitarian law carried out against the Tamil people".

In their bipartisan letter, they have called on the Biden administration to follow Article 30 of the UN Convention Against Torture and hold the island nation which has "consistently failed to make tangible progress toward justice and accountability".

In their joint letter addressed to Blinken members of the Congress representing both the Democrats and Republicans demand the State Department to hold Sri Lanka legally accountable to the UN convention on Torture.

"In our view, the impunity enjoyed by Sri Lankan perpetrators, which has also enabled Sri Lanka's economic and political crises, is counter to America's commitment to upholding human rights and democratic principles and must be stopped," the lawmakers led by Congressional Representatives Summer Lee (Democrat-Pennsylvania) and Bill Johnson (Republican-Ohia) wrote.

The dozen signatories allege the government and the military of Sri Lanka of committing serious international crimes.

"The Sri Lankan government and military are credibly accused of committing international crimes during Sri Lanka's armed conflict with the LTTE. Of which particular concern are Sri Lanka's action from January through May 2009, when the Sri Lankan Military intentionally shelled Tamil civilians and civilian objects, including hospitals, in so-called No Fire Zones".

In their letter, they also pointed out the sexual abuses carried out by the military against the Tamil population during the war.

"The Sri Lankan government and military raped and sexually mutilated hundreds of Tamil women and girls before or after killing them; extrajudicially executed LTTE members who had surrendered with white flags; and forcibly disappeared both LTTE members and Tamil civilians whose fates remain unknown".

Writing about the numbers killed during the final phase of war, the Congressional lawmakers say in the last five months the number of Tamil people unaccounted for and presumed to have been killed from 40,00 to 169,766.

Speaking about the lack of accountability they say Sri Lanka is harbouring a culture of rewarding people who have committed grave human rights violations rather than face trial.

"Instead of investigating and prosecuting allegations independently, the Sri Lankan government has rewarded many alleged war criminals with high-ranking political or military leadership positions, which some still hold today".

The US lawmakers letter to Blinken also speaks about the persistent militarization in the North-East, perpetuated land grabs, displacement, and repression of the right to memorialize.

Expressing their deep sense of anguish about the impunity the Congressional representatives have called in unfortunate.

"That the Sri Lankan government and military could commit such horrific crimes against Tamil people with total impunity is, unfortunately, unsurprising given Sri Lanka's long history of torture and related human rights violations. Tamils have long been subjected to the Sri Lankan security forces 'almost universal practice' of torture and ill-treating those in their custody, even before the armed conflict began in 1983".

Laws like the Prevention of Terrorism Act (PTA) have been used to facilitate such violations against the Tamils, their letter says. Adding further their letter says PTA has been used since 1979 to disproportionately target Tamils and Muslims including human rights defenders and journalists, with arbitrary arrest and detention, enforced disappearances, and torture.

Holding successive Sri Lankan governments responsible of not making tangible progress towards justice and accountability, including non-recurrence, reconciliation, and a political solution, the signatories emphasize such failures underscore the need for international action to achieve meaningful justice for Tamils and Muslims in Sri Lanka.

"Since 2011, civil and criminal cases on behalf of Tamil victims and survivors have been filed in third-party states, including the United States, against Sri Lankan political and military leaders responsible for international crimes, including torture".

Commenting strongly on the inaction of the state and lack of political will they allege, legal actions have not achieved justice, said the Congressional representatives.

"Consequently, no alleged Sri Lankan government or military perpetrator has been held responsible for international crimes in or outside Sri Lanka".

Therefore, they have urged the State Department to follow Article 30 of the Convention against Torture and hold Sri Lanka formally responsible for breaching its treaty obligations regarding torture. Also, they have suggested a three-pronged strategy to ensure accountability and end the culture of impunity, and save the alleged perpetrators.

Suggesting to achieve this through formal negotiations in the first place and if those negotiations fail or become futile or deadlocked the next step shall be through arbitration. In the event of the dispute not being resolved within six months, the US lawmakers have said, their government should bring a claim against Sri Lanka to the International Court of Justice.

The joint letter has been signed by representatives Summer Lee, Bill Johnson, Danny K. Davis, James P. McGovern, Jamie Raskin, Ilhan Omar, Cori Bush, Deborah K. Ross, Donald G. Davis, Jeff Jackson, Wiley Nickel, and Brad Sherman.

Various Human Rights organizations including PEARL have supported the bipartisan US Congressional letter to the Secretary of State Anthony Blinken.

https://d12t4t5x3vyizu.cloudfront.net/summerlee.house.gov/uploads/2023/09/Sri-Lanka-Letter-Final51-2.pdf

## பல்லாயிரம் பக்தர்கள் வடம்பிடிக்க இடம் பெற்ற வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் தேர் உற்சவம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்



வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா வியாழக்கிழமை (28) காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

காலை வசந்த மண்டப பூஜை இடம் பெற்றதைத் தொடர்ந்து, வல்லிபுர பெருமான் பரிவார மூர்த்திகளுடன் காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து வலம் வந்தார். தேருக்கு பின்புறமாக அங்க பிரதட்சை செய்தவர்கள், அடி அழித்தவர்கள், பஜனைக் குழுவினர், கற்பூரச்சட்டி, காவடிகள் என அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

ஆஞ்சநேயர் முன்னேவர பரிவார மூர்த்திகளும் தேரில் வர மூன்றாவது வல்லிபுரத்து ஆழ்வார் பெருந்தேரில் வலம் வந்தார். இதில் வடமராட்சி உட்பட யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் பல் ஆயிரம் பக்தர்கள் வருகைதந்து வல்லிபரத்தாழ்வார் தேர் உற்சவத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த 14-09-2023 அன்று கொடியேற்றத்துடன் ஆர்மபமான வருடாந்த உற்சவத்தில் 15வது நாளான இன்று தேர் உற்சவம் இடம் பெற்றது. அதேவேளை நாளை பிற்பகல் வல்லிபுரத்து ஆழதவாரின் சமுத்திர தீர்த்தமும், நாளை மறுதினம் கேணி தீத்தமும் இடம் பெற்று திருவிழா நிறைவு பெறவுள்ளது.

போக்குவரத்து சேவைகள் வழமையான முறையில் இடம்பெற்றன. மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் வீதிகள் தோறும் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு நீராகாரம் வழங்கப்பட்டது. பொலிசார் சாரணர், இலங்கை முதலுதவி சங்க தொண்டர்களும் பக்கர்களுக்கான ஒழுங்கமைப்பு, பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டனர்.



கிரிகைகள் யாவும் கணபதீஸ்வரக் குறுக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மேற்கொண்டனர்.


Angajan Ramanathan, M.P.
OFFICE OF THE DEPUTY CHAIRMAN OF COMMITTEES, PARLIAMENT

## யாழ்ப்பாண பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் விவசாய மின்மானி வாடகை கட்டணம் 300/= க்கு குறைக்கப்படும்

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள விவசாய மின்மானி வாடகை கட்டணம் முன்னர் அறவிடப்பட்ட 300/= க்கு குறைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவதது,

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக 24.07.2023 அன்று அனுப்பி வைத்த கடிதத்தில் இக்கோரிக்கையை முன்வைத்திருந்தேன்.

யாழ்ப்பாணத்தின் விவசாய பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கான மின்னிணைப்புகள் கடந்தகாலங்களில் வழங்கப்பட்டன. அவற்றின் மின்மானிகளுக்கான மாத வாடகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலையேற்றத்தால் ஏற்கனவே பாதிப்படைந்துள்ள நிலையில், தற்போது மின் மானிக்கட்டணத்தாலும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே யாழ்ப்பாண பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் மற்றும் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடி விவசாயிகளுக்கான மின்மானி வாடகையை மானிய அடிப்படையில் அறவிடுவதற்கான தீர்மானமொன்றை மேற்கொண்டு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என கடிதமும் ஊடாக கோரிக்கை முன்வைத்திருந்தேன்.

இதன்படி கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு, யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய மின்னிணைப்பு பெற்று தற்போது குறித்த விலைக்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் விபரங்களையும் கோரிக்கையையும் வழங்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அவ்விபரங்களை மின்சார சபையின் கவனத்திற்கு கொண்டுசென்று மின்மானிக்கட்டணத்துக்கான மானிய விலைக்குறைப்பை செய்யவும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## நூறாவது பிறந்தநாள். புரட்டாதி 24–2023
## முத்துத்தம்பி பேராயிரவர்

**(முன்னாள் அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)**

### பியர் ரூடோ கண்ட அமைதிக் கனவும், இன்றைய நிலையும்

அமரர் பேராயிரவர் எழுதிய கட்டுரையில் சிலபகுதி.



**பி**றந்த நாட்டில், 45 வருட ஜனநாயக சுதந்திர ஆட்சி, பேரின சர்வாதிகார இருளில் முடிந்துள்ளது. மனிதனின் அகத்தில், அவனது திறந்த தூய உள்ளத்தில் ஊறும் அன்பில்தான் சமாதான அமைதி உருவாகிறது. அதே அகத்தினை மூடிய இருளில்தான் நிறவெறி. போர், பயங்கரவாதம் உருவாகிறது. தன்னுள் சமாதானத்தை உணர்ந்த மனிதன், அதை மேலும் அனுபவிக்க, சமாதானத்தை விரும்புகிறான். மனிதன் தனது சமாதான வேட்கை சமூகத்தால் தடை செய்யப்பட்டால், அதை அனுபவிக்க துறவியாகிறான். அல்லது எங்களைப் போல் வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்து தப்பிப் பிழைக்கிறான். அல்லது ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்த நிலையில். துப்பாக்கியில் நம்பிக்கை வைக்கிறான். இந்தநிலை இலங்கையில் உண்டு. அந்த நாட்டு அணுகு முறைகள் இங்கே ஒவ்வாது.

கனடா ஒரு திறந்த ஜனநாயக நாடு. அகதிகளுக்கு, உலகில் சிறந்த புகலிடம். முதல்தரமான கல்வித்திட்டம். U.K. U.S.A போன்று ஒரு melting pot அல்ல. அங்கே படிப்படியாக, சகல இனங்களும் உருக்குலைந்து ஒன்றாக ஒன்றுபடவேண்டும். இங்கே மனிதநேயம்கொண்ட நாகரீகமான பல்கலாச்சாரக் கொள்கை.

அண்மையில், நாம் செய்த புண்ணியம், கனேடிய அரங்கில் இரு பெரும் சிந்தனைச் சிற்பிகள் செல்வாக்கு பெற்றிருந்தனர். ஒருவர் முன்னாள் பிரதமர் பியர் ருடோ. மற்றவர் மாஷல் மக்லுாகன் ரூடோ. நேருவின் நண்பர். இந்திய ஞானத்தை மதிப்பவர்.

ஒரு மனிதன் ஆத்மீகத்தில் உள்ளே ஆழமாகப் போக அவன் உலகளாவிய தன்மை பெறுகிறான் என்பது எமது பாரம்பரியக் கொள்கை. இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப செய்தித் தொடர்பு சாதனங்கள், உலகத்தை ஒரு சிறிய கிராமமாக்குகின்றன. அதே போல மனிதனையும் ஒரு உலகமனிதனாக்குகின்றன, என்கிறார் மாஷல் மக்லுாகன். இருவரின் சிந்தனையில், ஆத்மீகமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து cultural mosaic திட்டம் உருவானது.

ஐப்பசி மாதம் 1971 ஆண்டு, பிரதமர் ருடோ பல்கலாச்சாரத்திட்டத்தை பாராளுமன்றத்தில் பின்வருமாறு பிரகடனம் செய்தார்.

“கனேடிய மக்களின் கலாச்சார சுதந்திரத்திற்கு சிறந்த உத்தரவாதம் பல்கலாச்சரத்திட்டம் தான். தேசிய ஒருமைபாடு, பேச்சோடு நின்றுவிடாது உண்மையில் உருவாக வேண்டுமாயின், அது ஒவ்வொரு தனி நபரின் கலாச்சாரத் தனித்துவத்தின் இரசனையில் பிறக்கும் தன்நம்பிக்கையில், உதிக்க வேண்டும். தனது கலாச்சாரத்தை மதிப்பவன்தான் பிற கலாச்சாரங்களையும் மதிப்பான், பகிர்ந்து கொள்வான்.”

ருடோவின் திட்டத்திற்கு அமைய பாடசாலைகளில், இன்று பாரம்பரிய வகுப்புக்கள் நிலையாகிவிட்டன. ஆனால், தமிழ் பெற்றோரின் அக்கறையின்மையால் விரைவில் அற்றுப் போகலாம்.

ஒரு தமிழ் பிள்ளை பல்கலாச்சாரம் உள்ள ரொரன்டோவில் தனது பாரம்பரியத்தை அறியாவிட்டால், cultural conflict உருவாகி Identity Crisis உருவாகலாம்.

தன்னை அறிய தமிழ் மொழி நன்கு உதவும். தன்னை அறிய, தன்நம்பிக்கை, கௌரவம், கம்பீரம், பிறக்கும். பிற கலாச்சாரங்களை மதிப்பான். மேலும் அப்படிப்பட்டவனை இனவெறி ஒன்றும் செய்ய முடியாது, கல்வியால்தான் உடைக்க முடியும்.

ருடோவின் கனவு சித்தப்பிரமை அல்ல. கனடாவில் அது சாத்தியமாகும்.

## மழை

மழையே மழையே மெதுவாய்ப் பெய்வாய்
மாரிக் காரே மெத்தப் பெய்வாய்
அழையா விருந்தாய் அவனிக்கு வந்தாலும்
ஆசையாய் உனையே ஆதரித்து நிற்போமே!
குளங்கள் நிறைந்து கழனி விளையவும்
குடிநீர்ப் பஞ்சம் குறைந்து போகவும்
வளங்கள் பெருகி வாழ்வு சிறக்கவும்
வருவாய் விரைவாய் வருண பகவானே!

சிலநாள் சொல்லி வீட்டும் வருகிறாய்
சொல்லா வந்து சோதனை செய்கிறாய்
பலமுறை பாடாய்ப் படுத்து கின்றாய்
பயிர்களை நாசம் செய்துமே போகிறாய்
ஆலங்கட்டியாய் அழகு காட்டுகிறாய்
ஆவேசம் கொண்டும் அகிலத்தை அழிக்கிறாய்
காலம் பார்க்காமல் கலங்க அடிக்கிறாய்
காகுளியாய் மாறி காதையும் கிழிப்பாயே!

கார்முகில் கண்டால் கானமயில் ஆடுமாம்
கார்த்திகை வந்தால் கனமழை பொழியுமாம்
நீரிலா வாடிய நிலபுலம் எல்லாமே
நாற்று நிலமாய் மாறியே நின்றதே!
ஊருணி மட்டம் உயர்வு பெற்றதே!
ஊர்மனை எல்லாம் உற்சாகம் கொண்டனர்
பாருக்கு பருவமழை பொய்த்துப் போனால்
பாழாகிப் போகுமே பயன்தரும் யாவுமே!

சித்திரை நீவந்தால் சிறுமாரி என்றே
சிறுபயிர் எல்லாம் சீராய் விதைப்போம்
கத்திரி வெயிலில் கருக்கும் காலம்
கடவுள் போலவே கருனை காட்டுவாய்
காற்றுடன் சேர்ந்து கடுஞ்சேதம் செய்கிறாய்
காலம் அறிந்து கடமையும் புரிகிறாய்
சோற்றுக்கும் நீதான் துணையாய் இருக்கின்றாய்
சாற்றுதல் செய்கிறோம் சிறப்பாய் வாழ்கவே!

காகுளி – – – பேய்ச்சத்தம். நாற்றங்கால் – – – நாற்றுப்போடும் இடம்.
ஊருணி – – – சிறிய நீர்நிலை. கத்திரி – – – அக்கினி நட்சத்திரக் காலம்.

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# கனடாவில் Miss Tamil Universe – 2023 மாபெரும் விழா வெற்றிகரமாக நடைபெற்றது

கனடிய செய்திகள்
Canadian News

## முதல் இடத்தைப் பெற்ற அழகுச் செல்வி மெலிசா மாணிக்கத்திற்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன



கனடாவின் ஸ்காபுறோ நகரில் திருமதி. சசிகலா நரேந்திரா மற்றும் அவரது கணவர் திரு. நரேந்திரா ஆகியோரால் ஆரம்பிக்கப்பெற்று அழகும் அறிவும் பண்பாட்டுக் கோலங்களும் கொண்டு விளங்கும் இளம் மங்கையைத் தேர்ந்தெடுக்கும் போட்டி வரிசையில் இவ்வருடத்திற்குரிய Miss Tamil Universe - 2023 மாபெரும் விழா வெற்றிகரமாக நடைபெற்றது. ஸ்காபுறோ கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஐந்நூறுக்கும் அதிகமாக பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து இராஜாங்க கல்வி அமைச்சர் அரவிந்தகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் ரேமண்ட் சோ அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அன்றைய வெற்றிக்குரிய இளம் மங்கையைத் தேர்ந்தெடுக்கும் போட்டி மூன்று கட்டங்களைக் கொண்டதாக விளங்கியது. இறுதியில் நடுவர்கள் போட்டி முடிவுகளை அறிவித்தார்கள்.

முதல் இடத்தைப் பெற்ற அழகுச் செல்வி மெலிசா மாணிக்கத்திற்கு கிரீடம் அணிவிக்கப்பெற்று பரிசுகளும் வழங்கப்பெற்றன. இரண்டாவது இடத்தை மாலினி ரவீந்திரனும், மூன்றாவது இடத்தை நிசிகா சுவாமிநாதனும் தட்டிக் கொண்டார்கள்.











# கனடா வாழ் கிழக்கிலங்கையின் மைந்தன் விஸ்வலிங்கம் (விசு) அவர்களின் நீண்டகால தொண்டர் சேவையினை அங்கீகரித்து ஒன்றாறியோ அரசு "25 வருட நீண்டகால சேவைக்கான விருது" வழங்கி கௌரவிப்பு!



கனடா வாழ் கிழக்கிலங்கையின் மைந்தன் விஸ்வலிங்கம் (விசு) அவர்கள் தனது நீண்டகால தொண்டர் சேவைக்காக ஒன்றாறியோ அரசின் “25 வருட நீண்டகால சேவைக்கான விருது” (25 Years Long Services Volunteer Award) வழங்கி கௌரவிக்கப்பெற்றார்.

உதவும் பொற் கரங்களின் (Helping Golden Hands [HGH]) ஸ்தாபகரும் தலைவரும், கனடாவின் அதிவேக வளர்ச்சியில் முன்னணியில் திகழ்ந்துவரும் பிரம்ரன் (Brampton) மாநகரத்தின் அதி உயர் விருதான பிரம்ரன் குடியுரிமை தொண்டர் சேவைக்கான (Best Brampton Citizenship Award) விருதினை பெற்றுக்கொண்டவரும், மேலும் தாயகத்திலும் மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் அவர்களின் மகத்தான தொண்டர் சேவைக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தாயக உறவுகளுக்காக பல்வேறு நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்திவருவதுடன் ஏராளமான தொண்டர் நிறுவனங்களின் உயர் பதவியில் இருந்து சமூக நலன்சார்ந்த நிதி சேகரிப்பு மற்றும் தொண்டர் சேவைகளை ஆற்றிவரும் உயர் திரு. விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு திங்கட்கிழமை கனடா ஒன்றாறியோ மாகாணத்தின் (Ontario Government, Canada) அதி உயர் விருதான “இருபத்தைந்து வருட தொண்டர் சேவைக்கான விருது”, ‘‘25 Years Long Services Volunteer Award” வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிரேஷ்ர ஊடகவியலாளரும், எழுத்தாளருமான இலங்கேஸ்வரன் தருமலிங்கத்தின் பரிந்துரையின் பிரகாரம் இவ் உயரிய விருது விஸ்வலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொண்டர்கள் சமூகத்துக்கு ஆற்றிய தன்னார்வ சேவையின் சிறப்பான பங்களிப்பை அங்கீகரிப்பதுதான் இந்த விருதின் நோக்கம் எனலாம்.

தொண்டர் சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வில் முப்பதிற்கும் மேற்பட்ட தகுதியுடையவர்கள் அவர்களது கடின உழைப்பு மற்றும் நீண்ட கால தொண்டர் சேவையினை வழங்கியமைக்காக ஒன்றாறியோ மாகாண அரசின் சிறப்பு பிரிவினர் அவர்களை தெரிவு செய்து கௌரவம் செய்தனர். இன்றைய நிகழ்வில் Graham McGregor Member of Provincial Parliament of Ontario, Sylvia Jones - Deputy Premier of Ontario மற்றும் ஏராளமான சிறப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டு நிகழ்வினை எவ்வித தொய்வும் இன்றி நடத்தியமை சிறப்பானதாகும்.

புலம் பெயர்ந்து வாழும் கனேடிய மக்களின் மற்றும் தாயக மக்களின் நலப்பணித் திட்டத்தை ஒரு தொலைநோக்கு திட்டமாக சிறந்த குறிக்கோளுடன் பல தொண்டர் சேவை நிறுவனங்களுடன் குறிப்பாக கனேடிய மற்றும் தாயக தொண்டர் சேவை நிறுவனங்களின் சிறப்பு பிரதிநிதியாக விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துவருவது சிறப்பானதும் பாராட்டுதல்களுக்குரியதாகும்.

தாயகத்திலும் மற்றும் புலம்பெயர் தேசங்களில் குறிப்பாக கனடா நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கும் ஏராளமான அகதிகளின் குடும்ப நலன் சார்ந்த பல்வேறுவகையான சமூக நலன் சார்ந்த குறிப்பாக குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், வளர்ப்பு, மற்றும் ஆதரவு சமூகங்களை உருவாக்குதல், சமூக ஒருங்கிணைப்பு, கல்வி, ஆங்கில மொழியினை சரளமாக பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான வசதிகளையும் இதனுடன் சார்ந்த நிதியுதவி வசதிகளை வழங்குவது ஆகியவற்றில் அவரது பணி பாராட்டத்தக்கது.

விஸ்வலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பெற்ற இந்த விருது “உதவும் பொற் கரங்களின் (Helping Golden Hands [HGH])” அனைத்து நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டர்கள் என அனைத்து தரப்பினரின் கூட்டு முயற்சிக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய ஊக்கம் ஆகும். இதன் மூலம் இந்த பணிகளில் இன்னும் சிறந்த முறையில் சேவையை அதிகம் மேற்கொள்ள உதவியாக இருக்கும் என பல சிறப்பு பிரதிநிதிகள், ஊடக பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து விஸ்வலிங்கத்தின் செயல்பாடுகளுக்கு தங்களது ஆதரவினையும் உதவிகளையும் தாராளமாக வழங்குவதாக நிகழ்வின் இறுதியில் உறுதிமொழி கூறி பாராட்டுதல்களை தெரிவித்தனர்.

இந்த உயர் விருதினை பெறுவதற்காக நூற்றுக்கும் மேலான பரிந்துரைகளும் சிபாரிசுகளுடன் சேர்ந்த விண்ணப்பங்கள் ஒன்றாறியோ மாகாண அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாயினும் ஒரு சிலருக்கே அதி உயர் விருதான இருபத்தைந்து ஆண்டுகளை தொண்டர் மற்றும் தன்னார்வ சேவைகளில் முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உதவும் பொற் கரங்களின் (Helping Golden Hands [HGH]), இந்த அமைப்பு இத்தகைய சிறப்பை பெறுவதற்கு சமூக நோக்கின் அடிப்படையில் இதனை உருவாக்கிய விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் மனதார வாழ்த்துகின்றோம்.





# 'செயலி சூழ் உலகு'

Download on the App Store

தற்போதுள்ள யுகம் தொழில்நுட்ப யுகம். மனிதனின் 6-வது விரலாகவே ஸ்மார்ட்போன் மாறிப் போய் உள்ளது. நடுத்தரவர்க்கத்தினர் முதல் மிகப்பெரிய செல்வந்தர் வரை அவரவர் வசதிக்கேற்ப ஸ்மார்ட்போன்களை பயன்படுத்துகின்றனர். ஒட்டுமொத்த உலகத்தின் வளர்ச்சியால் நமக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பல விவரங்களை உடனடியாக வழங்குவது தான் இணையம் இதன் பரிமாண வளர்ச்சி தான் ஸ்மார்ட்போன் செயலிகள். நமது அன்றாட வாழ்வில் தேவையான பலவகைத் தகவல்களை நமக்கு அளிக்கின்றன. 2019 ஆம் ஆண்டின் கணக்கின்படி சுமார் 19 பில்லியனுக்கும் அதிகமான ஸ்மார்ட் போன் செயலிகள் பதிவிறக்க பட்டுள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட 46% சில்லறை பரிவர்த்தனைகள் ஸ்மார்ட் போன் செயலிகள் மூலம் செய்யப்படுவதாக ஆய்வுகள் தெரிகின்றன. நாம் எந்த நேரத்தில் என்னென்ன செய்வோம் எங்கெங்கு சென்றோம் எவ்வளவு நேரம் யாரிடம் பேசினோம் நமது வங்கிக் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது நாம் எங்கு பயணம் செய்கின்றோம் அங்கு போக்குவரத்து நெரிசல் உள்ளதா அருகில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் எரிபொருள் நிரப்பும் இடங்கள் உணவகங்கள் போன்ற தகவல்களை நமக்கு அளிக்கின்றது. நாம் ஆரோக்கியமாக இருக்கின்றோமா அவ்வாறு இல்லை என்றால் என்ன செய்வது, சரியான விகிதத்தில் தண்ணீர் அருந்துகின்றோமா, நமது ஆரோக்கியத்தை மேம்படுத்த என்னவெல்லாம் செய்யலாம். என்பது போன்ற தகவல்களை நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட்போன் செயலிகள் மூலம் நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

**செயலிகளின் வளர்ச்சி:**

முன்பொரு காலங்களில் பணம் வேண்டும் என்றால் வங்கிக்கு சென்று கால்கடுக்க பல மணி நேரங்கள் காத்திருந்து பணம் எடுக்கவும், டெபாசிட் செய்யவும் இருந்த காலம் போய், இன்று இருந்த இடத்தில் இருந்து நிமிடங்களில் நமது ஸ்மார்ட் போன்கள் மூலமாக மூலம் பணம் அனுப்பும் பரிமாற்ற முறையானது பெரும் பிரபலமாகி வருகின்றது. இதனை வங்கிகளே இவ்வகை பணப்பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கின்றன இதனால் பொதுமக்களிடம் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பயன்பாட்டின் எளிதே இதன் வெற்றிக்கு முதல் காரணம். படித்தவர் முதல் பாமரர் வரை அனைத்து மக்களும் மிக எளிதாய் பயன்படுத்துவது தான் இதன் சிறப்பு. அதனால் ஆன்லைன் பேமெண்ட் செயலிகள் அசுர வளர்ச்சி அடைந்து வருகின்றன. பெட்டிக்கடை முதல் அதிநவீன மால்கள் வரை நமது ஸ்மார்ட் போனில் உள்ள பேமெண்ட் ஆப் ஸ்கேனரை ஸ்கேன் செய்து சில நிமிடங்களிலேயே பணம் செலுத்திவிடலாம். இதனால் சில்லறை தட்டுப்பாடு என்பது ஏற்படுவதில்லை. முன்பொரு காலத்தில் நமக்கு பிடித்த திரைப்படத்தை பார்க்க வேண்டும் என்றால் அந்த திரையரங்கில் சென்று கால் கடுக்க நின்று டிக்கெட் எடுத்து நாம் விரும்பிய திரைப்படத்தை பார்க்கும் சூழல் இருந்தது ஆனால் இப்போது வீட்டில் இருந்தபடியே நமது ஸ்மார்ட் போன் மூலமாகவே இணையத்தில் டிக்கெட் பெறும் முறை மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. நகரப்பகுதிகள் காலையில் பால் வாங்குவது தொடங்கி, உணவருந்தும் ஹோட்டல்களில் பில்கள், மளிகை பொருட்கள், மொபைல் ரீசார்ஜ், மின் கட்டணம் எனப் பற்பல சேவைகளையும் நான் பயன்படுத்தும் ஸ்மார்ட் போன் செயலி மூலமாக செய்து கொள்ளலாம்.

**அன்றாட வாழ்வில் செயலிகள்:**

பரபரப்பான இன்றைய வாழ்வியல் சூழ்நிலையில் ஸ்மார்ட்போன் என்பது மிக முக்கியமாக ஒன்றாக பார்க்கப்படுகின்றது பல வேலைகளை நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட்போன் செயலிகள் நமது வேலையை எளிதாக்குகின்றன. மேலும் இன்று ஸ்மார்ட் போன் செயலிகள் மூலம் உணவு விநியோக பயன்பாடுகள் என்பது அதிகரித்துள்ளது இது இல்லாத வாழ்க்கையை இன்று நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது. ஆன்லைன் உணவு விநியோக சேவைகள் தொழில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்களில் ஒன்றாகும். 2022 ஆம் ஆண்டளவில் ஆன்லைன் உணவு விநியோகத் துறை 8.4% வளர்ச்சியடையும் என்று ஆய்வு கூறுகிறது. உணவு டெலிவரி நிறுவனங்களின் விற்பனை படுஜோராகவே இருக்கிறது. இந்தியாவில் மட்டும் நாள்தோறும் 10 லட்சத்துக்கும் அதிகமான ஆர்டர்கள் வருவதாக கூறப்படுகிறது. மேலும் செயலிகள் மூலம் புக் செய்யப்படும் வாடகை கார்கள் கூகுள் மேப் உதவியுடன் நாம் இருக்கும் இடத்திற்கே வந்து நம்மை நாம் விரும்பிய இடத்திற்கு கூட்டி செல்வது போன்ற காரணங்களாலும் பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்த வகை செயலிகள் வடிவமைத்திருப்பது போன்ற காரணங்களால் இவ்வகையான செயலி மூலம் இயங்கும் டாக்ஸிகளுக்கு இந்தியா போன்ற பல்வேறு நாடுகளில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும் அவற்றின் வருவாயும் சென்ற ஆண்டை காட்டிலும் 13. 7 சதவீதம் அதிகரித்துள்ளதாக வளர் தொழில் முன்னேற்ற அமைப்பு என்ற ஒரு தனியார் நிறுவனம் இந்தியாவில் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

**விழிப்புணர்வு அவசியம்:**

நான் பயன்படுத்தும் செயலிகளில் குறை நிறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆம் நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட்போன்களால் ஆபத்துகளும் பிரச்சனைகளும் அதிகமாகவே உள்ளன. எனவே எந்த வகையான செயலிகளை பயன்படுத்துகின்றோம், எதற்காக பயன்படுத்துகிறோம், அது நமக்கு எவ்வாறு உதவுகின்றது இதனால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன என்பது பற்றிய புரிதல் என்பது நமக்கு அவசியம். நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் ஒவ்வொரு செயலிகள் மற்றும் ஸ்மார்ட் சாதனங்களால் நமது தனிப்பட்ட விவரங்கள் வெளியாவது அதிர்ச்சி அடைய வைக்கிறது. ஸ்மார்ட் ஃபோன்களின் வளர்ச்சியினால் சைபர் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. நமது வங்கிக் கணக்கில் உள்ள பணம் திருடு போவதற்கு இந்த மொபைல் செயலிகள் ஒரு காரணமாக அமைகின்றன. தினந்தோறும் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் வரும் செய்திகளே இதற்கு சாட்சி ஆன்லைன் மூலம் பண மோசடி என்ற செய்திகள் சமீப காலமாக அதிகமாக வருகின்றன. என்னதான் நாம் விழிப்புணர்வுடன் இருந்தாலும் ஒரு சில நேரங்களில் நமக்கே இது பயத்தினை தருகின்றது. செயலிகள் மூலம் பணம் செலுத்தும் போது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டால் என்ன செய்வது?. பணம் எவ்வாறு செலுத்துவது என்பது கேள்விக்குறி தான். மேலும் டிஜிட்டல் நிதி பரிவர்த்தனைகள் தோல்வியடையும் போது நமது வங்கி கணக்கில் இருந்து பணம் எடுக்கப்பட்டு பரிவர்த்தனைகள் தோல்வி என்ற செய்தி வரும் போது அந்த பணத்தை எவ்வாறு மீட்பது யாரிடம் கேட்பது என்பதில் பலருக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது. எது எப்படியோ இதில் நன்மை தீமைகள் கலந்து தான் உள்ளன. இதில் உள்ள நன்மைகளை மட்டும் எடுத்துக் கொண்டு நமக்கு தேவையில்லாதவற்றை விட்டு விடுவோம் அவ்வாறு செய்தால் மட்டுமே நம்மால் இந்த டிஜிட்டல் யுகத்தில் சரியாக இருக்க முடியும். விழிப்புணர்வு என்பது மிக முக்கிய ஒன்றாக பார்க்கப்படுகின்றது. போலியான செயலிகள் மற்றும் தகவல்களில் இருந்து நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும். சரியான முறையில் ஸ்மார்ட் போன்கள் அதன் செயலிகளை பயன்படுத்துவோம் பாதுகாப்பாய் இருப்போம் முன்னேறுவோம்.

# வட மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் பூரண ஆதரவு



**- நடராசா லோகதயாளன்**

வடமாகாணத்தின் உட்கட்டமைப்பு மற்றும் பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ழான் பிரான்ஸ்வா பாசே (Jean Francois Pactet) தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் 27.09.2023 அன்று ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது வடமாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் பிற வளர்ச்சி செயல்முறைகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இப்பகுதி சிறுவர்களின் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் பூரண அனுசரணையை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து ஆளுநர் பிரான்ஸ் தூதுவரிடம் விளக்கி கூறினார்.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் பிரான்ஸ் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மை காலத்தில் பன்னாட்டு தூதர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்ச்சியாக விஜயம் செய்தி, அங்குள்ள தேவைகள் குறித்து கலந்துரையாடி உதவிகளை அளித்து வருவது கவனிக்கத்தக்கது.

அவ்வகையில் அமெரிக்க தூதர் ஜூலி சங் அம்மையார் யாழ்ப்பாணத்திற்கு நீண்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு, அரச தரப்பு மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களையும் சந்தித்து பேசியிருந்தார்.

கனடா தூதர் எரிக் வால்ஷ் அவர்களும் தனது அண்மைய பயணத்தின் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை சந்தித்து உரையாடியிருந்தார். அப்போது வடக்கில் இன்னும் விடுவிக்கப்படாத காணிகள் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புகள் தொடர்பில் அவர்கள் கலந்துரையாடியிருந்தனர். மேலும் காணி விடுவிப்பு தொடர்பிலான ஆவணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் கனேடிய தூதரிடம் கையளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



RESIGNATION LETTER

I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.

Please accept my resignation

Thank you.

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவி துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு குறுந்தூர்மலை விடயத்தில் கட்டளை பிறப்பித்த காலம் முதல் தொடர் நெருக்கடிக்கு இலக்கான நீதிபதி, 2023-09-23 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கு நீதிமன்ற கடித தலைப்பில் தனது பதவி விலகலை அறிவித்துள்ள நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவி துறப்பதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு எதிராக அண்மையில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிபதி சரவணராஜா முல்லைத்தீவு குறுந்தூர்மலை தொடர்பில் பிறப்பித்த கட்டளைக்கு எதிராக, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உட்பட்ட இனவாதகள் நீதிபதியை மோசமாக விமர்சித்து கருத்துக்கள் வெளியிட்ட நிலையில் தற்போது நீதிபதி தனது பதவியை துறப்பதாக எழுதியுள்ளார்.

இதேநேரம் நீதிபதியின் பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழு ஏதும் கருத்து வெளியிடவில்லை.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக கூறி பதவி விலகல் கடிதத்தை அளித்துள்ள நீதிபதி, நாட்டிலிருந்து வெளியேறிவிட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும் இதை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

## கடந்தவையும் கடப்பவையும் - (72)

*பூங்காவிற்குப் போன பின்பு மனதைவிட்டு*
*நீங்காத ஏதோவொன்றை சொல்வதற்கு*

*விருப்பப்படும் அங்கிளின் மனக்குறிப்பை*
*விளங்கிக்கொள்ள முடிந்தவராய் இருந்தபோதும்*

*காரணத்தை கேட்கவில்லை கனநேரம் - அங்கிளுக்கு*

*காதல் வயப்பட்ட கதையேதும் உண்டோ - காதலால்*
*நோதல் நிலைக்கு உட்பட்டாரோ*

*அடிக்கடி பெருமூச்சு 'அதுவும் ஒரு காலம்' - என்றபடி*
*தனக்குள் ஏதோ நினைப்பவராய் இருந்தவரை*

*'குழப்பமாய் இருப்பது போல் உள்ளதே - அங்கிள்*
*எமக்கும் தான் சொல்லலாமே' என்றதுதான்*

*தொடங்கினார் அங்கிள் இப்படித்தான்,*
*'பெடியனாக இருந்தபோது அடிக்கடி வந்தஇடம் - அன்றிங்கு*

*வடிவான பிள்ளைகளும் வந்து வந்து போவார்கள் - நான்*
*தெரியாமலேனும் கதைத்ததில்லை யாரோடும்*

*வெகுளிபோல் இருந்த நண்பனுக்கு கிளிபோல*
*அழகியொருத்தி அகப்பட்டாள் தனியார் வகுப்பொன்றில்*

*தெளிவான காதல் சோடிகள் தேர்ந்தெடுத்தார் - தம்மை*
*வடிவாகப் படம் பிடிக்கும் கலைஞனாக*

*வகைவகையாய் படம் எடுக்க அவர்கள் பின்*
*புகைப்படக் கருவியோடு நான் - அவர்*

*போகும் இடம் எல்லாம் போய்வந்ததுவும் - சில*
*காலம் கழிந்த பின்பு கரம்பிடிக்க நினைத்தவர்*

*இருவரது வீடுகட்கும் தரகராய்ப் போய்*
*தாறுமாறாய் பேச்சுக்களை வாங்கியதும் - அன்று*

*'ஆனையிறவுக்கு இங்கால' வேறுவேறாய் இருந்தவரை*
*ஆனையிறவுக்கு அங்கால இழுத்துவர முயன்றபோதும் - முடியாது*

*மனமுடைந்து நின்றதுவும் , கொண்ட கொள்கை மாறா*
*நிலையான காதலர்கள் நின்மதியாய் வாழவென*

*வெளிநாடு போனதுவும் என கடந்தகால*
*தெளிவான காதல் ஒன்றை கண்முன்*

*கொண்டுவந்து காட்டியவர் சொன்ன வார்த்தை அது*
*அன்றைய யாழ்ப்பாணத்தார் பேச்சிலும் இருந்ததுவாம் - அது*

*'அனையிறவுக்கு அப்பால எல்லாமும் ஒன்று தான்' - மதிப்பு மிகு*
*பேராசான் ஒருவரின் எழுத்திலும் அறிந்ததுண்டு - இதை*

*அங்கிள் இன்று சொன்னபோது வியக்கவில்லை - இன்னமும்*
*இங்கிதமாய் பேசப்போலும் உதவுதிது - மேலும்*

*பெடியளது காலத்தில் கொண்ட காதல் எல்லாமே - மனம்*
*ஒடியாது ஒரு எல்லைக்குள் நின்றதென்றார் இரண்டுபட - சிலசமயம்*
*சொல்லுகின்ற செய்திகளை இப்படித்தான் சொல்லுகிறார்*

*எல்லைக்குள் நின்றாலும் எத்தனை அல்லல் என - அங்கிளுக்கு*
*சொல்லிக்காட்ட முன்வந்தார் அவரருகில் இருந்தவர்*

*அன்றைய காலத்தில் அதிகளவு இடப்பெயர்வு*
*எங்கெங்கோ இருந்து வந்தவர்கள் - மனதளவில்*

*சங்கமம் ஆகியே இருந்தாலும் - அன்றும்*
*சங்கடங்கள் எவ்வளவோ இருக்கத்தான் செய்தன*

*இக்கட்டான சூழலில் எத்தனை இடர்பாடுகள்*
*அங்கொன்றும் இங்கொன்றுமான குண்டுகளுக்குள்*

*அகப்பட்டு இறந்ததால் சேராமல் போனவர்கள் - இழப்புக்கள்*
*பொறுக்காது இயக்கம் எனச் சென்றவர்கள் - குடும்ப*

*அழுத்தங்கள் அதிகரிக்க உடன்போக்காய் போனவர்கள் - தலை*
*எழுத்து இதுவென மனமுடைந்து வெளிநாடு சென்றவர்கள் - சில*

*போராளி ஆனவரும் காதல் வயப்பட்டு - முறையாக*
*இல்லறத்தில் இணைந்ததுவும் இடைநடுவில்*

*உயிர் பிரிந்து போனதுவும் காணாமல் போனவருள் - இனியும்*
*உயிர் சுமந்து வருவாரென உடல் தளர்ந்து*

*உருக்குலைந்து அலைக்களியும் காதல்களும் - இன்றுவரை*
*இருக்காமல் இல்லை' என நாம் கடந்துவரும் காலத்து*

*கடினமான காதல்களை கிடைத்த - அந்த*
*இடைவெளிக்குள் அவரும்தான் சொல்லிடவும் - குளிராக*

*குடிப்போமா ஏதேனும் என்பவரின் குரல்வந்து - இன்னும்*
*நீடிக்க வேண்டாம் இக்கதையை என்பதாக குறுக்கறுக்க*

*சரி எனச்சொன்னவர்கள் நல்ல குளிர்களி*
*கடையொன்றைத் தேடுகிறார் .......*

*( தொடரும்)*

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# மொன்றியலில் ஓர் இரட்டை அரங்கேற்றத்தின் மூலம் ஒரு இசை இளவரசன் அறிமுகம்



கவிக்கு அப்துல் ரகுமான். சுதந்திரக்கவி சுப்பிரமணிய பாரதியை அறிமுகம் செய்யும் போது "எட்டயபுரத்திலே இரட்டைப் பிறவி. ஒன்று நீ! இன்னொன்று உன்னடைய தமிழ்..." என்று பாரதியை வியந்து பாடுகின்றார்! அதே போன்று செப்டெம்பர் 10ம் நாள் ஞாயிறு மாலை College Ahunstic அரங்கில் செல்வன் துவாரகன். தபோதரன் அவர்களின் இரட்டை அரங்கேற்றம் அறிமுகமாகியது இது மொன்றியல் நகருக்குப் புதியது. இது வரை இங்குள்ள அரங்குகளிலே இரட்டை அரங்கேற்றம் இடம்பெறவில்லை. ஒன்று வாய்ப்பாட்டு, இன்னொன்று தண்ணுமை வாத்தியம் (மிருதங்கம்).

இளங்கலைஞர் மன்றம் மிருதங்க சேஸ்த்திரம் பெருமையுடன் ஏற்பாடு செய்த துவாரகனின் அரங்கேற்றஇசை முழக்கம் அருள்திரு - திருமுருகன் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிறீ வெங்கடேஸ்வரக் குருக்கள், பூர்ணானந்த விசாகன் ஐயா இருவரினதும் ஆசிகளுடன் ஆரம்பமாகியது. துவாரகனின் குருவான "சங்கீதபூசணம்" பொன். சுந்தரலிங்கம் அவர்கள் முன்னிலை வகிக்க கூடவே புகழ் பெற்ற இசைக் கலைஞர்களான வாசுதேவன் - ராஜலிங்கம் (மிருதங்கம்), வயலின் வாத்திய வித்தகி டாக்டர் சிறீமதி தனதேவி மித்ரதேவா, செல்வி தாரணி தபோதரன் (வயலின்), திரு. ரமணன் கிருஸ்ணராசா (கஞ்சிரா), கலையரசன், சிங்கராஜ் (கடம்) மோகனன் ரவீந்திரன் (மோர்சிங்) - செல்விகள் ரிந்திகா குமாரசாமி, கவிசியா. குமாரசாமி (தம்புரா) ஆகிய இசை வல்லுநர்கள் இணைந்து அரங்கேற்ற இசைநிகழ்வுகளை பிரமாதப்படுத்திவிட்டனர்.



நமது பாரம்பரிய இசைக்கோலங்கள் மரபுமாறாது, மரபுமீறாது, பயில்வதற்கு முன் வந்த நமது பிள்ளைகளுக்கு வாழ்த்துக்கூறி வரவேற்போம். "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என அப்பர் சுவாமிகள் பாடி வைத்தது போன்று நம்மண்ணில் இசைக்கலைஞர்கள் மிக வாஞ்சையுடன் புதியமாணவர்களை புலம்பெயர் மண்ணில் உருவாக்கி வருவதையும் அப்படிப் பயில வேண்டும் எனும் அவாவுடன் பயிலும் துவாரகன் போன்ற மாணவச் செல்வங்களை வாழ்த்தி வரவேற்போம்.

வாய்ப்பாட்டு, வாத்திய இசைக் கருவிகளை மீட்டல், பயிற்சி பெறுவதற்கு அகவுருப்பும், ஆண்டவன் அருளும், எமக்கு வேண்டும். அதுவும் இசையோன் எப்படி இருக்கவேண்டும் என்ற இலக்கணம் அறிந்தவராக விளங்கவேண்டும் சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையில் இதுபற்றி எழுதிவிபரிக்கும் அடிகளார்



"யாழும், குழலும், சீரும், மிடறும், தாழ்துரல் தண்ணுமை, ஆடலோடு இவற்றின் இசைந்த பாடல் இசையுடன் படுத்து வரிக்கும் ஆடற்கும் உரிப் பொருள் இயக்கத் தேசிகத் திருவின் ஓசை எல்லாம் ஆசின்றி உணர்ந்த அறிவினன் ஆகிக், கவியது குறிப்பும், ஆடற்தொகுதியும், பகுதிப் பாடலும் கொளுத்தும் காலை வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும் அசையா மரபின் இசை யோன் தானும்" என இலக்கணம் கூறுகிறார் இளங்கோவடிகள்.

அதாவது யாழிசையும், குழலிசையும், தாளக்கூறுப் பாடல்களும், மிடற்றுப் பாடலும், தாழ்ந்தகுரல் எழுப்பும் தண்ணுமையும் (மிருதங்க வாத்தியம்) ஆகிய இவற்றால் இசைந்த இசையைக் கூடத்துக்கும் பொருந்துமாறு இசையுடன் இசைக்க வல்லான் ஆகவும், சொற்களின் ஓசையைச் சுத்தமாகக் கடைப் பிடிப்பவன், அந்தச் சொற்களின் ஓசை குறிக்கும் பொருள்களெல்லாம் குற்ற மறத் தெரிந்த அறிஞனாகவும், தான் அவ்வாறு கொண்ட உறுதியினின்றும், அசையாத இயல்பினை உடையவனாகவும், இசைப்புலவன் இருக்க வேண்டும் அத்தகைய ஒருவர்தான் எமது மண்ணின் இசைப்புலவன் சங்கீத பூசணம் பொன். சுந்தரலிங்கம் ஐயா அவர்கள். அவரும் அவருடன் இணைந்து வயலின் வித்தகி திருமதி. தனதேவி மித்ரதேவா, தண்ணுமைக் கலைஞர் வாசுதேவன் ராஜலிங்கம், மற்றும் ஒன்றுகூடி வாசித்த இசைக் கலைஞர்களும், செல்வன் துவாரகனின் அரங்கேற்று காதையை அமர்க்களப்படுத்தி ஆனந்தம் கொள்ள வைத்துவிட்டனர்.

பிரதமவிருந்தினராக வருகை தந்து இரு அரங்கேற்ற நிகழ்வுகளை மிகவும் இரசித்துக் கொண்டிருந்தவரான ஜி.ஆர்.எஸ். மூர்த்தி அவர்கள் தனது உரையில் கூறியதாவது "இரட்டை அரங்கேற்ற நிகழ்வுகளாக தாளவாத்தியமும், மிருதங்கம், வாய்ப்பாட்டு, இராகங்களை அரங்கேற்றம் செய்வதற்கு இலகுவாக எவரும் நினைக்கமாட்டார்கள். கட்டுப்பாடு, ஒழுக்கம் நிறைந்த மாணவனான துவாரகனைப் பயிற்றுவித்த பெரும் புகழ் படைத்த மூத்த கலைஞரான திரு. பொன் சுந்தரலிங்கம் ஐயாவும், மிருதங்க ஆசான் திரு. வாசுதேவன் ராஜலிங்கமும், அதே கட்டுப்பாடுடனும், கடினபயிற்சியுடனும் பயிற்றுவித்து, இன்று இளங்கலைஞன் துவாரகனின் அரங்கேற்றம் காண்பதற்கு மிக உறுதுணையாக இருந்ததை மனப் பூர்வமாகப் பாராட்டி மகிழ்கின்றேன்" எனப் பாராட்டினார்.

மேலும் துவாரகனின் குரல்வளத்தையும், மொழிவளத்தையும் எடுத்துக் கூறி சோர்வில்லாமல் தினசரி பயிற்சி செய்துவந்தால் துவாரகனின் எதிர்காலம்



பிரகாசமாக விளங்கும் என்று அறிவுறுத்தியதையும் துவாரகன் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் கல்வி கற்கும் துவாரகன் ஓய்வு கிடைக்கும் போது தமிழ் இசைப் பாடல்களைம் கீர்த்தனைகளையும் தவறாது பாடியும் பயிற்சியும் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

உங்களுக்கு கலைவாணியின் அருள் மிகுந்துள்ளதால் அடையாளம் காணக் கூடிய குரல்வளம் உண்டு. வாய்ப்பாட்டுப் பயிற்சிகளை கடினமாகப் முயற்சி செய்தது தெரிகிறது. உங்கள் ஞாபகசக்தி வளம் பெறுவகற்கு இது உதவும். இதுவரையும் நல்லதொரு கர்நாடக இளம் மாணவனை நான் அறிந்திருக்க வில்லை. இனிமேலும் நீங்கள் தான் மொன்றியல் சங்கீத இளவரசன். நல் வாழ்த்துகள்.

பாரதி ராஜாவின் "பதினாறு வயதினிலே" படத்தில் மயிலு (சிறீதேவி) அம்மா! நான் பாசாயிட்டேன், பாசாயிட்டேன் எனக் கூவிக்கொண்டு வயல் வரம்பில் ஓடி வருவாள்!

அதேபோல் நீங்களும் அம்மா! அப்பா! நான் அரங்கேற்றத்தில் டபிள் பாசாகி விட்டேன் என்று தைரியமாகக் கூறுங்கள்!

**வீணை மைந்தன், கவிஞர் - எழுத்தாளர்**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1067

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் கொக்குவில், யாழ்ப்பாணம்

அசம்பாவிதங்களின் பின் ஆலயத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1988 ஆம் ஆண்டு ஆலய மண்டபத்தில் திரு. சி. காசிநாதன் அவர்கள் தலைமையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. சண்முகநாதன் அவர்கள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றது. இவர்களது ஆலோசனையின் பிரகாரம், நித்திய பூசைகளை மேற்பார்வை செய்வதற்காக ஐந்துபேர் கொண்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இதே ஆண்டு மகாசபை கூடி திரு. இ. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மகர்த்தா சபை மீண்டும் அமைக்கப்பட்டது. இச்சபையின் ஆலோசனைப்படி சில தற்காலிக நியமனங்கள் ஆலயத்திலே மேற்கொள்ளப்பட்டது. 1988 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆலயத்தின் நித்திய, பூசைகளைச் செய்வதற்காக சிவஸ்ரீ. கு. பாலசுப்ரமணியக் குருக்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இவரைத்தொடர்ந்து இதேயாண்டு குட்டி ஐயர் என்று அழைக்கப்படும் சிவஸ்ரீ. பா. சண்முகராஜக்குருக்கள், ஆலய நித்திய பூசைகளைச் செய்வதற்குத் தற்காலிகமாக தர்மகர்த்தா சபையினால் நியமிக்கப்பட்டார். மகோற்சவ விழாவை சிவஸ்ரீ. க. குகதாசக் குருக்கள் செய்து வந்துள்ளார். இவர் தலைமையில் ஆலயத்தில் பாலஸ்தாபனமும் இடம்பெற்றது.

மீண்டும் ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக, இருப்தியொருபேர் கொண்ட திருப்பணிச் சபையினை தர்மகர்த்தா சபை நியமித்தது. திருப்பணிச்சபையும், தர்மகர்த்தா சபையும் இணைந்து திருப்பணிவேலைகளை நிறைவேற்றின. திருப்பணி வேலைகளுக்கான நிதியை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலுள்ள முருகபக்தர்கள் மனமுவந்து வழங்கியுள்ளனர். கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் புதிதாக விக்கிரகங்கள் நிறுவப்பட்டு அவற்றிற்கான கோயில்களும் அமைக்கப்பட்டன. திரு. சி. குமாரசாமி குடும்பத்தினரால் மகாலட்சுமி சிலாவிக்கிரகம் செய்யப்பட்டு கோயிலும் அமைக்கப்பட்டது. திரு. ச.சந. திரமெளலீசன் குடும்பம், திருமதி. நடராசா பவளம் குடும்பம் மற்றும் திரு. ச. லிங்கநாதன் குடும்பம் ஆகியோர் இணைந்து, நவக்கிரக மண்டபத்தினையும் அவற்றிற்குரிய சிலா விக்கிரகங்களையும் நிறுவ உதவினர்.

திரு. மதியாபரணம் குடும்பத்தினர், புதிதாக சமயகுரவர் நால்வரது சிலாவிக்கிரகம் அமைக்க உதவினர். பழனியாண்டியான தண்டாயுதபாணி எழுந்தருளி விக்கிரகத்தினை திருமதி. நடராசா முத்துலட்சுமி குடும்பத்தினர், ஐம்பொன்னாலான விக்கிரகமாக உபயம் செய்தனர். இதேகாலப்பகுதியில் ஆறுமுகசாமி வெளிவாயில் மணிமண்டபமும் புதிதாக அமைக்கப்பட்டது. ஆலயவாசல் வெளி மண்டபத்தைச் சுற்றி இரும்பாலான அழகிய கிராதியும் போடப்பட்டது மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலே, கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றின் வாயில்களிலே பித்தளையாலான அழகிய மூன்று திருவாசிகளும், ஸ்நபன மண்டப வாயிலுக்கு பித்தளையாலான அழகிய கேடயமும் அமைந்து அழகைக் கொடுக்கின்றது. இவற்றினை வைத்திய கலாநிதி செல்லையா தனபாலசுந்தரம் குடும்பத்தினர், தமது தாயார் சொர்ணம் செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக அமைத்துக் கொடுத்துள்ளனர். இவற்றோடு 1989 ஆம் ஆண்டு, இக்கோயிலில் பரிவார மூர்த்திகளுக்கு கோயில் அமைக்கப்பட்டது.

இவ்வாறாக பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, 1989 ஆம் வருடம் சிறப்பானமுறையிலே மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. இக்கும்பாபிஷேகக் கிரியைகளை, பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ க. குகதாசக்குருக்கள் பிரதம குருவாக விளங்கி, சிவஸ்ரீ கா. மகாதேவக்குருக்கள், மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்த சகலாகமசங்கரர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோருடைய அனுசரணையுடனும், மற்றும் பல சிவாச்சாரியார்களின் உதவியுடனும் நிறைவேற்றியுள்ளார். இதே வருடம் நடைபெற்ற மகோற்சவத்தின்போது, முருகப்பெருமானுக்கு ஒரு சப்பறம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம், முருகன் அடியார்கள் உள்ளத்திலே தோன்றியது. இதன் விளைவாக கொக்குவில் வைத்திலிங்கம் சற்குணம் அவாகள், 1990 ஆம் ஆண்டு சப்பறம் ஒன்றை உருவாக்கி உபயமாக அளித்துள்ளார்கள்.

இவ்வாறாக படிமுறையாக வளர்ச்சிபெற்று வந்த இவ்வாலயத்தின் வரலாற்றிலே, 1998 ஆம் ஆண்டு மிக முக்கியமான காலகட்டமாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டின் ஆலம்பத்திலே நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில், திரு. த. கணேசபிள்ளை, திரு. இ. இராசலிங்கம், திரு. க.இ. இராசசேகரம் ஆகியோரை முறையே தலைவராகக் கொண்டு, பன்னிரண்டு உறுப்பினர்களுடன் நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப்பட்டது. இவர்களின் முயற்சியினால் கோயில் கிணற்றடிவரை தார்போட்டதெருவொன்று அமைக்கப்பட்டது. அத்தோடு கோயிலின் தென்மேற்குப்புறமுள்ள மண்வீதியும் தார்போட்டு செப்பனிடப்பட்டது. இக்காலப்பகுதியில் இவ்வாலயத்திலே பாரிய திருப்பணிவேலைகள் செய்யவேண்டிய நிலை காணப்பட்டது. இக்காரணத்தினால் 1999 ஆம் ஆண்டு திருப்பணிச்சபையொன்று நிறுவப்பட்டது. ஆரம்பகாலத்தில் பல்வேறு திருப்பணிகளுக்கு உறுதுணையாகவிருந்த அமரர் ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால், வியாழவரிவரை கட்டப்பட்டுக் காணப்பட்ட கோபுரத்தை அத்திவாரமாகக்கொண்டு, இராஜகோபுரம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இப்பணிக்கு முன்னின்று உழைத்தவராக திரு. சபாரத்தினம் சண்முகரத்தினம் அவர்கள் விளங்கியுள்ளார்கள்.

இப்பெரியவர் கனடாவிலுள்ள முருகனடியார்களிடம் நிதி சேகரித்தும், தன்னுடைய பங்களிப்பாக நிதியையும் சேர்த்து அனுப்பி, இப்பணியைத் தொடக்கிவைத்துப் பெரும்பணி ஆற்றியுள்ளார். அத்தோடு இவ்வாலயத்தோடு தொடர்புகொண்ட கொழும்பிலுள்ள முருகன் அடியார்களும், உள்ளூரிலுள்ள அடியார்களும் சேர்ந்து வழங்கிய நிதியின்மூலம், இராஜகோபுரத்திருப்பணியும், காண்டாமணிக் கோபுரங்களும் நிறைவுசெய்யப்பட்டன. மஞ்சவனப்பதி இராஜகோபுரக் கட்டடவேலைகளை, அராலியூர் திரு. கந்தசாமி கோபாலசிங்கம் அவர்களும், இராஜகோபுரத்தின் சிற்பவேலையை அவ்வூரைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு மதியழகன் அவர்களும் செய்துள்ளனர். வர்ணந்தீட்டும் வேலைகளை திரு. கந்தசாமி சுந்தரலிங்கம் அவர்கள் நிறைவேற்றியுள்ளார். இராஜகோபுரத்திற்கு இருபக்கமும் மணிக்கூட்டுக்கோபுரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பிள்ளையார் மணிக்கூட்டுக் கோபுரத்தை திரு. க.வை. சற்குணம் அவர்க்ள தமது செலவில் கட்டுவித்தள்ளார். அத்தோடு அதற்குரிய காண்டாமணியையும் தமது சகோதரர் திரு. க.வை. சிவநேசன் அவர்களுடைய ஒத்துழைப்புடன் நிறுவியுள்ளார்.

- வளரும்...

## நடிகர் திலகத்தின் 'மூளாய் வரை உறவு' அவரது புதல்வர் ராம்குமார் அவர்களால் புதுப்பிக்கப்பெற்றது



"ஊட்டி வரை உறவு" என்ற நடிகர் திலகம் நடித்து வெளிவந்த திரைப்படம் புதுமை இயக்குனர் ஸ்ரீதர் அவர்களின் இயக்கத்தில் உருவானது. இந்தத் திரைப்படம் நூறு நாட்களை கடந்து வெற்றிப்படப் பட்டியலில் இடம்பெற்றது.

இந்த காலப் பகுதியில் தான் ஒரே நேரத்தில் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்து வெளிவந்த "இருமலர்கள்" படமும் 100 நாட்களைக் கடந்தது. இவையிரண்டும் 1967ல் ஒரே நாளில் திரையிடப்பெற்றன.

ஒரே சமயத்தில் திரையிடப்பெற்று வெற்றிப் படங்களாகத் திகழ்ந்தவை சிவாஜி கணேசன் அவர்களின் திரைப்படங்களே ஆகும். இது ஒரு சினிமா வரலாறு.

இனி, சிவாஜி கணேசன் அவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள மூளாய் என்னும் கிராமத்திற்கும் என்ன உறவு என்று பார்ப்போம். யாழ்ப்பாண மக்கள் மீது சிவாஜி கணேசன் அவர்கள் எவ்வளவு அன்பும் பாசமும் கொண்டவர் என்பது பலருக்கு தெரியாத விடயமாகும்.

1952ல் "பராசக்தி திரைப்படம் வெளியானதும் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகராகிய சங்கரப்பிள்ளை அவர்கள் "பராசக்தி" மூலம் அறிமுகமாகிய சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பில் மெய்மறந்து. அவரை நேரில் சந்தித்து பாராட்டி மகிழ்வதற்காகச் சென்னைக்கு செல்கிறார்.

அங்கு சிவாஜி கணேசன் அவர்களை நேரில் பாராட்டியதோடு. அவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து அவருக்கு ஒரு பாராட்டு விழா எடுத்தார். இந்தச் செய்தி அக்காலத்தில் வெளியான "ஆனந்தவிகடன்" சஞ்சிகையிலும் பிரசுரமானது குறிப்பிடத்தக்கது.

அந்த பயணத்தின் போது சிவாஜி கணேசன் அவர்களை சுழிபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள மூளாய்க்கு அழைத்துச் சென்று அங்கு கட்டடம் எழும்பிக் கொண்டிருந்த காட்சியை அவருக்கு காட்டினார். தொடர்ந்து வர்த்தகரான சங்கரப்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி இந்த மூளாய் வைத்தியசாலை கட்டடம் முழுமையாக பூர்த்திசெய்யப்படுவதற்கு 1953ல் மீண்டும் சிவாஜி கணேசன் அவர்கள் தனது நாடகக் குழுவுடன் இலங்கைக்கு வந்து அவருடைய நாடகங்களில் ஒன்றான "என் தங்கை" நாடகத்தை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் மேடையேற்றினார். பின்னர் அதன் மூலம் வசூல் செய்யப்பெற்ற மொத்த தொகையான இலங்கைப் பணம் இருபத்தையாயிரத்தை மூளாய் வைத்தியசாலை கட்டட நிதிக்காக வழங்கினார் சிவாஜி கணேசன் அவர்கள்.

அந்த விஜயத்தின் போது சிவாஜி கணேசன்
அவர்களின் பெயர் பதித்த நினைவுக் கல்லும். அவரே தனது கையால் நாட்டிய மாங்கன்றும் இன்று விருட்சமாக வளர்ந்து நடிகர் திலகம் என்னும் கொடைவள்ளலை நினைவு கொள்ளச் செய்கின்றது.

இவ்வாண்டின் சித்திரை மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிவாஜி கணேசன் அவர்களின் மூத்த மகன் ராம்குமார் அவர்கள் மூளாய் சென்று தனது தந்தைக்கும் மூளாய்க்கும் உள்ள உறவின் அடையாளமாகத் திகழும் அந்த மாமரத்தின் அடியில் அமர்ந்திருந்து உணர்ச்சி பொங்க கண்ணீர் சிந்தியதை எமது உறவுகள் கண்டு வியந்த காட்சிகள் மற்றும் செய்திகள் யாவருக்கும் தெரிந்த ஒன்றாக விளங்குகின்றது - அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த எனக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "மருதுமோகன் எழுதிய "சிவாஜி கணேசன்" என்னும் ஆய்வு நூல் வளியீட்டு விழாவில் தளபதி ராம்குமார் அவர்களை மேடையில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அப்போது நான் எழுதிய "சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்" என்ற நூலின் பிரதியொன்றை அவரிடம் கையளித்தேன்.

இறுதியாக நண்பர்களே! வாசகப் பெருமக்களே! நாமெல்லாம் ஒன்றிணைந்து சிவாஜி கணேசன்
அவர்களின் பெருமைகளை நன்றிகளை நினைவு கொள்ளும் முகமாக என்னால் கனடா உதயன் வார இதழில் தொடராக எழுதப்பெற்று கடந்த செப்டம்பர் மாதம் 23ம் திகதி அன்று "நடிகர் திலகமும் தமிழ்ச் சினிமாவும்" நூல்வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தும் ஆதரவு நல்கியும் ஒத்துழைத்த அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இங்ஙனம், வீணைமைந்தன் சண்முகரராஜா**
**மொன்றியால்**




# அன்பின் தொனி - 706

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஒப்புககொடுத்தல் (அற்பணிப்பு)** Commitment

**அரை குறை ஒப்புவிப்பு பரிபூரண கிறிஸ்தவ வாழ்கையாக அமையாது**

Partial Commitment is no Commitment

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ குளிருமல்ல அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்.
**- வெளிப்படுத்தல் 3: 15-16**

**ஒப்புக்கொதலைக்குறித்து இன்று சபைகளின் நிலைஎன்ன?**

தேவனோடு எமக்கு இருக்கும் உறவின் அளவில்தான் ஒப்புக்கொதல் தங்கியிருக்கிறது. ஒப்புக்கொதலைக் குறித்து பரிசுத்த வேதாகமம் அதிகமாக விபரிக்கிறதை கவனிக்க வேண்டும். எவ்வளவிற்கு தேவனில் அன்பு வைக்கிறோமோ, அவ்வளவிற்கு ஒப்புக்கொடுப் போம்.

நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத் தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளு கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, **- உபாகமம் 6: 5-7**

இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. **- மத்தேயு 22: 37**

உமதுகையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர். **- சங்கீதம் 31: 5**

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும். **- நீதிமொழி 16: 3**

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். **- சங்கீதம் 37: 5**

இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகாசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார். **- லூக்கா 23: 46**

ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்து மாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.
**- 1 பேதுரு 4: 19**

அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். **- 2 தீமோத்தேயு 1: 12**

**கனி கொடுக்கிற கிறிஸ்தவனுக்கான ஏழு வகையான ஒப்புக்கொடுத்தல்**

**1. முழு இருதயத்தோடு இயேசுகிறிஸ்துவின் ஆழுகைக்கு தன்னை அர்ப்பணித்தல்**

அப்பொழுது, இயேசுதம்முடைய சீ'ர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகி வன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். **- மத்தேயு 16: 24-25**

*தொடரும்...*

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 20)

*(Continued from last week)*

Abolition of Privy Council

In Mudanayake case, two petitioners filed writs of certiorari alleging that the Ceylon (Parliamentary Elections) Amendment Act, No. 48 of 1949 (Franchise Act), read with provisions of the Citizenship Act constituted a "communal restriction" on the Indian Tamil community, violating section 29(2). The Franchise Act provided that no person could be added to the electoral registry if he/she was not a citizen of Ceylon. Sections 4 and 5 of the Citizenship Act set forth the requirements for Ceylonese citizenship by descent—requirements that became more onerous if born outside Ceylon or if one's father was not a Ceylonese citizen.

That these provisions had the effect of denying the franchise to many Indian Tamils was not in dispute. For the Court, however, such discriminatory effects were irrelevant to the constitutionality of these laws. It adopted a rule of interpretation from "several English cases of high authority." The rule was that legislative intent can be "legitimately ascertained" from express words in the relevant statute or by "reasonable and necessary implication."

By choosing this rule, the Court foreclosed any inquiry into the consequences of the Citizenship and Franchise Acts. The petitioners cited several American cases in which judges looked beyond the text to ascertain legislative intent, including Yick Wo v. Hopkins,86 a landmark U.S. Supreme Court case that held San Francisco city ordinances unconstitutional for discriminating against Chinese immigrants. The ordinances were racially neutral—they made it unlawful to operate a laundry in the city without the consent of the Board of Supervisors. The Court held that these ordinances nonetheless violated the Fourteenth Amendment to the U.S. Constitution, as they unjustly discriminated against the Chinese community, who were the chief proprietors of laundry businesses.

The Ceylon Supreme Court distinguished this case on the dubious grounds that evidence of discrimination against the Chinese community in San Francisco was not used to gauge the meaning of the ordinances but simply to establish that, in their operation, they infringed a constitutional right. Why couldn't usee a similar rationale in the Ceylonese context? Perhaps section 29(2) of the Soulbury Constitution, unlike the U.S. Constitution, did not enumerate individual rights, and, therefore, could be read more narrowly. The Court did not explain. Instead, it dismissed the American cases with the following rationale:

[These cases] do not support the proposition . . . that it is proper to travel outside the language of the impugned enactments and to take evidence as to whether or not, in their ultimate effect, they are of a discriminatory character. . . . We have come to the conclusion that if [the Citizenship and Franchise Acts], . . . [do] not offend against S. 29 . . . it does not matter what effects they produce in their actual operation.

Armed with this narrow rule of interpretation, the Court upheld the constitutional validity of the impugned acts. The fact that "a large section of Indians is disqualified" from voting was "irrelevant," as this was not a necessary legal effect flowing from the Act's express language.

Significantly, the Court provided an additional justification for its ruling: judicial restraint grounded in Ceylon's sovereignty. The Court did not inquire into the purpose of Section 29 or any of the political events surrounding the drafting of the Soulbury Constitution. Rather, it stated:

It seems to us that the inherent power of a sovereign state to determine who the citizens should be . . . [is] more germane to the issues . . . than a perilous expedition into the political controversies of the past. After reading the Soulbury Commission Report and the connected Sessional Papers [one of the petitioners] . . . seems to have formed the opinion that section 29 was intended to be a safeguard for minorities.

To the contrary, the Court declared that the Ceylon Parliament "has the power to alter the electoral law in any manner it pleases . . . subject to the narrow limitation in Section 29."

On appeal, the Privy Council upheld this judgment in Kodakan Pillai v. Mudanayake. The Privy Council issued a short opinion that largely echoed the Supreme Court's reasoning. It provided two main justifications: (1) that it is a "perfectly natural and legitimate function of the legislature of a country to determine the composition of its nationals"; and (2), that the negative effects of the two Acts on the Indian Tamil community "have nothing to do with them as a community." On the second point, the Council referred to the Soulbury Commission Report, which confirmed the "migratory habits" of the Indian Tamils that made them unsuited to citizenship. Furthermore, the fact that citizenship laws might disproportionately harm the illiterate and the poor were irrelevant, as neither was a "community" within section 29(2).

The Privy Council's reasoning is revealing both in its disregard for the rights of the Indian Tamil community and its endorsement of the Supreme Court's narrow interpretation of section 29(2). As discussed, this interpretation emerged from a series of English cases, which were decided vis-à-vis a sovereign legislature. A highly deferential judicial approach was appropriate in the British context, for under the prevailing Diceyan theory of parliamentary sovereignty, Parliament was unfettered in its lawmaking. But this was not the case in Ceylon where, per Jennings, the Soulbury Constitution imposed manner and form limitations on legislative authority. The Citizenship Act, therefore, should have been invalidated for transgressing constitutional bounds. Unlike in Britain, the Constitution attained a higher status than ordinary legislation in Ceylon.

Mudanayake laid the foundation for undue judicial restraint that the Ceylon judiciary would follow in future cases involving discrimination against minority communities. As discussed, the Soulbury Constitution did not entrench fundamental rights or provide for communal representation in government. Rather, it placed its faith in Westminster institutions and the singular figure of D. S. Senanayake to protect minority rights.

D.S. Senanayake, made efforts to temper communal tensions both in his rhetoric and in his cabinet appointments. Shortly before independence, he reached out to minority groups in a speech to the State Council: "For centuries the Sinhalese and the Tamils have lived together in peace and amity. . .. We all know and admire [the minority communities'] . . . special qualities. They are essential to the welfare of this Island, and I ask them to come over and help us." As prime minister, Senanayake ensured that his cabinet proportionately represented all minority groups. He even brought Ponnambalam, his erstwhile rival, into the cabinet as Minister of Industries, Industrial Research, and Fisheries. As political scientist A. J. Wilson put it, the "unexpressed premise" of the Soulbury Constitution was an "agreement between the English-educated elites of all the island's principal groups" to govern cooperatively.

Where judicial challenge mounted by Mudanayake failed both in the Supreme Court of Ceylon and Privy Council in London, Kodeeswaran succeeded in securing a favourable judgment though partially. As stated above, the Privy Council directed the Supreme Court in 1969 to address the constitutional question, which it had not considered when overturning Kodeeswaran's plea whether the Official Language Act of 1956 which made Sinhala the official language was in violation of Section 29 of the constitution, which prohibits discrimination.

Stung by the Privy Council judgment, the government lost no time in abolishing the Privy Council itself. The opportunity came when Mrs. Bandaranaike's coalition won a landslide victory at the polls held in 1970. The coalition consisted of the Sri Lanka Freedom Party (SLFP), the Lanka Sama Samaja Party (LSSP), and the Communist Party of Ceylon (CPC) in 1968. Dr. Colvin R de Silva, an ardent Trotskyite and a champion of workers' rights, was appointed Minister of Constitutional Affairs. He vowed to change the constitution so that there will be "no more Kodeeswaran type challenges". ( To be continued)

# இவ்வார ராசிபலன்

**29-09-2023 வெள்ளி தொடக்கம் 05-10-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: *3,2,1,9*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: *3,2,9,8*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: *2,5,9,4*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்யம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர்த் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைக்கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *1,9,7,5*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z




**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்யம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையக்கடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி, தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *4,6,8,9*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *2,1,9,7*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீர்கள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: *6,9,1,2*
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J

***(தொடர்ச்சி 30 பக்கம்)***

## இவ்வார ராசிபலன்

(29 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்கியம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மகிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோ'மான சூழ்நிலை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர் மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிறர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

# இலண்டனில் கலாசேத்திரா நாட்டியசேத்திரா பள்ளியின் மாணவி தரண்யாவின் அரங்கேற்றம்



கலாசேத்திரா நாட்டியப் பள்ளியின் முன்னாள் மாணவியும் சிறந்த பரதநாட்டிய ஆசிரியையுமான ஸ்ரீமதி திரிவேணி சங்கர் அவர்களின் முதல் அரங்கேற்றமாக. இது இலண்டனில் 23 செப்டெம்பர் 2023 இல் இடம்பெற்றது. உடலும் உள்ளமும் மலர இறைவனுக்கும் குருவுக்கும் சபையோருக்கும் வணக்கம் செலுத்தியபடியே நிகழ்வானது ஆரம்பமாயிற்று. விநாயகர் துதியுடன், அலாரிப்பும் அவையோரை நெகிழ வைத்தது. அடுத்து தரண்யாவே நடன அமைப்பு செய்திருந்த ஜதீஸ்வரத்தை மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் ஆடி அற்புதம் நிகழ்த்தினார்.

சப்தத்தில் இராமாயணத்தை தன் முகபாவம், அங்க அசைவுகள் மூலம் எம் கண்முன்னே கொண்டு வந்திருந்தார். இராமர் சிவதனுசை வளைத்தல், வாலியை வதம் செய்தலை மிகவும் தத்ரூபமாக ஆடியிருந்தார். வர்ணமோ முருகன் பிறந்தது, வள்ளியை மணந்தது, அசுரனை அழித்தது என்று நவரசங்களையும் வெளிப்படுத்தி அவையோரை மெய் சிலிர்க்க வைத்தது.

திருமதி. திரிவேணி சங்கரால் எழுதி நடன அமைப்பு செய்யப்பட்ட கீர்த்தனம் சிதம்பரத்தை கண்ணால் கண்டு களிக்க வைத்தது. இதனைத் தொடர்ந்து சிவன் மேல் மகள் கொண்ட காதலை தாய் கேலி செய்வதை பதத்தில் அழகாக அபிநயித்தார். நேரத்துக்கு வராத சிவன் மேல் நாயகி காட்டும் கோபத்தை ஜாவலியிலும், ராதையை பொருட் படுத்தாது கோபியருடன் விளையாடும் கிருஷ்ணரின் அழகையும் அழகாக அஷ்டபதியில் அபிநயித்து ஆடி அரங்கத்தினரை அகமகிழ வைத்து விட்டார்.





விறுவிறுப்பான வேகம் நிறைந்த தில்லானா அவையோருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. நிறைவாக மங்களத்தை மன மகிழ்வுடன் ஆடி அரங்கத்தினரின் எட்டு திக்கையும் முழுங்க வைத்த கரகோசங்களை தனதாக்கினார். நாட்டிய அரங்கேற்றத்திற்கு இசைவாக இனிமையான பாடல்களை ஸ்ரீ வம்சிக்கிருஷ்ணா விஷ்ணுதாசும், ஆடலுக்கு உயிர் கொடுத்த ஸ்ரீ காரைக்குடி சு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மிருதங்கமும், ஸ்ரீ சிதம்பரநாதன் ஜலதரன் அவர்களின் வயலின் இசையும், ஸ்ரீ பிச்சையப்பா ஞானவரதன் அவர்களின் புல்லாங்குழல் இசையும் மிகவும் அற்புதமாக அமைந்திருந்தன.

ஆசிரியையின் அதி உன்னத உழைப்பும், ஆற்றலும் அரங்கேற்றத்தில் அழகாக வெளிப்பட்டது. தரண்யாவும் முத்திரைகள், அடவுகள் சுத்தத்துடன் உடல் உறுப்புகளால், கண்களால் உள்ளக் கருத்துக்களை அழகாக அற்புதமாக ஆடி அசத்தி விட்டார். கலாசேத்திரா ஆசிரியர்களை மட்டுமே உள்ளடக்கிய இலண்டன் தமிழ் நிலைய மாணவியின் அரங்கேற்றமும் கலாசேத்திராவிற்கே உரிய சிறப்புகளுடன் மிடுக்காக மிளிர்ந்தது. தரண்யாவின் நாட்டியப் பயணம் தொடர்ந்து சிறப்புற்று வளர தென்னாடுடைய சிவனை வேண்டுகிறேன்.








- திருமதி. அகல்யா நித்தியலிங்கம்

# MORTGAGE FINANCIAL






RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL
VACANT LAND CONSTRUCTION

**NESAN** Subramaniam **416-908-5656**

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank | TD Canada Trust | RFA | First National Financial LP
MCAP | Home Trust | Equitable Bank | radius financial | RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1434 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 29, 2023

# Miss Tamil Universe – 2023 மாபெரும் விழா வெற்றிகரமாக நடைபெற்றது



கனடாவின் ஸ்காபுறோ நகரில் திருமதி சசிகலா நரேந்திரா மற்றும் அவரது கணவர் திரு நரேந்திரா ஆகியோரால் ஆரம்பிக்கப்பெற்று அழகும் அறிவும் பண்பாட்டுக் கோலங்களும் கொண்டு விளங்கும் இளம் மங்கையைத் தேர்ந்தெடுக்கும் போட்டி வரிசையில் இவ்வருடத்திற்குரிய **Miss Tamil Universe-2023** மாபெரும் விழா வெற்றிகரமாக நடைபெற்றது. ஸ்காபுறோ கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஐந்நூறுக்கும் அதிகமாக பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து இராஜாங்க கல்வி அமைச்சர் அரவிந்தகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

உள்ளே விபரமான செய்தி 24ம் பக்கத்தில்)

# ஹவாய் சன்மார்க்க இறைவன் ஆலய சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயத்தில் "ஆன்மீகச் சொற்பொழிவு"ஆற்றினார்



ஹவாய் தீவில் அமைந்திருக்கும் சன்மார்க்க இறைவன் ஆலயத்தைச் சேர்ந்த சற்குரு போதிநாத வேலன் சுவாமி அவர்கள் இன்று மாலை கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் "ஆன்மீகச் சொற்பொழிவு" ஒன்றை ஆற்றினார். அவரோடு இணைந்து ஹவாய் ஆலயத்திலிருந்து சற்குரு சண்முகநாத சுவாமி அவர்களும் வருகை தந்திருந்தார்.சுவாமிகள் இருவரும். ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் வரவேற்றார்.

(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)

# பிரம்ரன் விஸ்வலிங்கம் (விசு) தனது தொண்டர் சேவைக்காக ஒன்ராறியோ அரசின் "25 வருட நீண்டகால சேவைக்கான விருது" பெற்றார்




கனடா வாழ் கிழக்கிலங்கையின் மைந்தன் விஸ்வலிங்கம் (விசு) அவர்கள் தனது நீண்டகால தொண்டர் சேவைக்காக ஒன்ராறியோ அரசின் "25 வருட நீண்டகால சேவைக்கான விருது" (25 **Years Long Services Volunteer Award)** வழங்கி கௌரவிக்கப்பெற்றார்.

உதவும் பொற் கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் தலைவரும், கனடாவின் வளர்ச்சியில் முன்னணியில் திகழ்ந்துவரும் பிரம்ரன் **(Brampton)** மாநகரத்தின் அதி உயர் விருதான பிரம்ரன் குடியுரிமை தொண்டர் சேவைக்கான விருதினை பெற்றுக்கொண்டவருமான விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் உதயன் பத்திரிகையோடு நெருக்கமான உறவைக் கொண்டவர்.

(உள்ளே விபரமான செய்தி 24ம் பக்கத்தில்)

# நடிகர் திலகத்தின் "மூளாய் வரை உறவு" அவரது புதல்வர் ராம்குமார் அவர்களால் புதுப்பிக்கப்பெற்றது



"ஊட்டி வரை உறவு" என்ற நடிகர் திலகம் நடித்து வெளிவந்த திரைப்படம் புதுமை இயக்குனர் ஸ்ரீதர் அவர்களின் இயக்கத்தில் உருவானது. இந்தத் திரைப்படம் நூறு நாட்களை கடந்து வெற்றிப்படப் பட்டியலில் இடம்பெற்றது.

இந்த காலப் பகுதியில் தான் ஒரே நேரத்தில் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்து வெளிவந்த "இருமலர்கள்" படமும் 100 நாட்களைக் கடந்தது. இவையிரண்டும் 1967 ல் ஒரே நாளில் திரையிடப்பெற்றன.

ஒரே சமயத்தில் திரையிடப்பெற்று வெற்றிப் படங்களாகத் திகழ்ந்தவை சிவாஜி கணேசன் அவர்களின் திரைப்படங்களே ஆகும். இது ஒரு சினிமா வரலாறு.

இனி, சிவாஜி கணேசன் அவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள மூளாய் என்னும் கிராமத்திற்கும் என்ன உறவு என்று பார்ப்போம். யாழ்ப்பாண மக்கள் மீது சிவாஜி கணேசன் அவர்கள் எவ்வளவு அன்பும் பாசமும் கொண்டவர் என்பது பலருக்கு தெரியாத விடயமாகும்.

(உள்ளே விபரமான கட்டுரை 27ம் பக்கத்தில்)

# மொன்றியலில் ஓர் இரட்டை அரங்கேற்றத்தின் மூலம் ஒரு இசை இளவரசன் அறிமுகம்



கவிக்கு அப்துல் ரகுமான். சுதந்திரக்கவி சுப்பிரமணிய பாரதியை அறிமுகம் செய்யும் போது "எட்டயபுரத்திலே இரட்டைப் பிறவி ஒன்று நீ! இன்னொன்று உன்னடைய தமிழ்"..என்று பாரதியை வியந்து பாடுகின்றார்! அதே போன்று செப்டெம்பர் 10ம் நாள் ஞாயிறு மாலை **College Ahunstic** அரங்கில் செல்வன் துவாரகன் தபோதரன் அவர்களின் இரட்டை அரங்கேற்றம் அறிமுகமாகியது இது மொன்றியல் நகருக்குப் புதியது.

இது வரை இங்குள்ள அரங்குகளிலே இரட்டை அரங்கேற்றம் இடம்பெறவில்லை. ஒன்றுவாய்ப்பாட்டு,இன்னொன்று தண்ணுமை வாத்தியம் (மிருதங்கம்). இளங்கலைஞர் மன்றம் மிருதங்க சேஸ்த்திரம் பெருமையுடன் ஏற்பாடு செய்த துவாரகனின் அரங்கேற்றஇசை முழக்கம் இறுதி வரை களைகட்டி நின்றது.

(உள்ளே விபரமான செய்தி 26ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker